

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)


தொகுப்பாசிரியர்
**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்
முனைவர் ப.ஸ்ரீதேவி
முனைவர் பா.பத்மபிரியா
திருமதி ர.கண்ணகி
முனைவர் மா.கிருஷ்ணவேணி
பேரா. தி.தமிழ்ச்செல்வி
முனைவர் ந.சுமதி
செல்வி ந.காருண்யா


உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022
மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

# உலகப் பொதுமறை
# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | **உடையார்கோயில் குணா** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **ப.ஸ்ரீதேவி**<br>முனைவர் **பா.பத்மபிரியா**<br>திருமதி **ர.கண்ணகி**<br>முனைவர் **மா.கிருஷ்ணவேணி**<br>பேரா. **தி.தமிழ்ச்செல்வி**<br>முனைவர் **ந.சுமதி**<br>செல்வி **ந.காருண்யா** |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# திருக்குறளில் இல்லறம்

முனைவர் **ப.ஸ்ரீதேவி**
தமிழாய்வுத்துறைத்தலைவர்
ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி
திருச்சிராப்பள்ளி

பழந்தமிழ் நூல்களில் சிறப்பிடம்பெற்ற நூலாக திருக்குறள் விளங்குகின்றது. அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூலாக விளங்கும் திருக்குறள் மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம், தர்மம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைப் பற்றி நுவலுகின்றது. பழந்தமிழ் நூல்களிலும் நான்கு பெரும் பகுப்புகள் கொண்டள்ளன.

எட்டுத்தொகை பத்துப்பாட்டு, பதினென்மேல் கணக்கு,பதினென்கீழ்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள்அவற்றில் பதினென்கீழ்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் முப்பால் என்னும் பெயரோடு இந்நுல் விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம், ஆகிய மூன்றும் பால்களும் கொண்டமையால் முப்பால் எனப் பெயர்பெற்றது. முப்பால்களாகிய இவை ஒவ்வொன்றும் இயல் என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது, ஒவ்வொரு அதிகாரமும் பத்துப்பாடல்களைக் தன்னுள் அடக்கியது.

**பாவகை**

திருக்குறள் அனைத்துமே குறள் வெண்பா வகையைச் சேர்ந்தவை. இவ்வகை வெண்பாக்களாலாகிய அக்காலத்திய

முதல் நூலும் ஒரே நூலும் திருக்குறள் ஆகும். குறள் வெண்பாக்களால் ஆனமையால் குறள் என்றும் திருக்குறள் என்றும் இது பெயர் பெற்றது.

**பாயிரம்**

பாயிரம் என்னும் பகுதியுடன் முதலில் அறத்துப்பாலில் அறம், பொருள், இன்பம், தொடங்கி இன்பத்துப்பால் முற்றுப்பெறுகிறது.

குறளின் பகுப்பும் அமைப்பும்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று "அகரம்"முதல்தொடங்கி அறம், பொருள், இன்பம் என்று எல்லா கருத்துகளையும் உள்ளடக்கியிருக்கின்றனர்.

தனிமனிதனுக்கு உரிமையானது இன்பவாழ்வு, அதற்கு துணையாக உள்ளது பொருளியல் வாழ்வு. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்கலன்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதலே அனைத்து அறம்"அறத்தால்வருவதேஇன்பம்ஆகும். அறவழியில்நின்றுபொருள்ஈட்டிஅதனைக்கொண்டுஇன்பவாழ்வுவாழ வேண்டும்.

**அறக்கருத்து**

இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை

மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்

மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்

**அறக்கருத்துகள் பற்றிய அறிஞர்கள் கருத்து**

பழங்காலத்தில் அறிஞர்கள் இலக்கியங்களை அறங்களின் அடிப்படையிலேயே மதிப்பிட்டார்கள். தமிழில் தொல்காப்பியர் அறங்களை வலியுறுத்தினார். கிரேக்கத்தில் பிளேட்டோ மற்றும் ஆங்கிலத்தில் கவிஞரும் விமர்சகருமான மாத்யூ அர்னால்டு, இது பற்றி வலியுறுத்தி இலக்கியத்தில் அறநெறி பற்றி குறிப்பிடுகிறார்கள்.

இலக்கிய உலகில் அறநெறிக் கோட்பாடுகள் சமூகவியல் நோக்கோடு ஆராயப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை,

முதலாகிய ஐந்திணை என்று மட்டும் சொல்லி நிறுத்தாமல் அதற்கு ஒரு நீண்ட அடைமொழியை தொல்காப்பியர்

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"
(தொல்.பொருள் களவு 89)

என்று குறிப்பிடுகின்றார். இன்பமும் பொருளும் அறனும் என்பது உலகின்கண் நுகரும் காதல் இன்பமும், உலகவாழ்க்கையின் பொருள் என அமையுமாறு அறநிலை ஒழுக்கத்தின்பால் நிகழ்தலைக் குறித்தலாம். இது களவொழுக்கத்தின் சிறப்பு நிலை என்க. அன்பொடு புணர்ந்த ஐந்திணையாகிய ஒழுகலாறுகள் அன்பின் வயத்தால் நிகழ்த்தல் என்பதாகும்.

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (குறள்76)

அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும். என்பர் அறியாதார் ஆனால் மறத்திற்கும் அதுவே துணையாகும்.

சங்க இலக்கியங்களில் அன்றைய காலத்து அறநெறிக் கருத்துகள் அதிகமாக இருக்கும் நிலையில் குறிப்பாக அக இலக்கியங்களுக்கும் புற இலக்கியங்களுக்கும் அறநெறிகள் அடிப்படை வாழ்க்கை நெறியைக் குறிப்பிட்டுயிருக்கின்றனர். காப்பியத்திலும் அறம் பற்றிய கருத்து உண்டு.

"அரசியல் பிழைத்தோர்க்கும் அறங் கூற்றாகும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" (சிலப்பதிகாரம்)

இக்கால இலக்கியமான மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் நாவல் பெண்ணின் பெருமையைப் பேசுகிறது என்பதோடு மட்டுமல்லாமல் சிறந்த ஆண், சிறந்த பெண், சிறந்த குடும்பம் எப்படியிருக்க வேண்டும் என்பதை மரபு வழியிலான தமிழ்ச் சமுதாயத்தின் அறவழியில் நின்று விளக்கமாகப் பேசுகின்றது. இவை திருக்குறளில் குறிப்பிடுவது போல அறகொள்கைகளையும் அறநெறிக் கோட்பாட்டின் மூலமாக வெளிப்படுகின்றது.இந்த அறநெறியின் வழியே இல்லறமாகிய நல்லறம் செவ்வனே மிளிர்கின்றது.

**இல்லறமே நல்லறம்**

தமிழ் இலக்கியத்தின் நீண்ட வரலாற்றில் பெரும்பாலானவை அறம் பேசுபவையாகவே அமைந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடைதல், நூற்பயன் என்று இலக்கணம் பேசுகின்றது. தன்னெஞ்சறிவது பொய்யறக. மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்று திருக்குறள் சமயம் சாராத அறத்தைக் கூறுகிறது.

**இல்லறம் கூறும் அறவியல்**

இல் அறம் இல்வாழ்வின்கண் நின்று மனதால் தூய்மைப்பட அறம் செய்து ஒழுகி வாழ்தல். அவ்வாறு வாழுமிடத்துத் தம்மைச் சார்ந்தோருக்கும், சாராதோருக்கும் யாவர்க்கும் உதவி செய்து வாழ வேண்டும், இல்வாழ்வை.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள்45)

திருமண வாழ்க்கை ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அன்பாகவும் ஒற்றுமையாகவும் உண்மையாகவும் அமைந்துவிட்டால் அதுவே சிறந்த பயன்னுள்ள பண்புகளையுடைய வாழ்க்கையாக இருக்கும்.

இல்லற வாழ்க்கை ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கணவனும் மனைவியுமாகக் கூடி வாழும் வாழ்க்கையாகும். இருவருள் ஒருவர் இல்லையானாலும் இல்லறம் சிறப்புறாது. இல்வாழ்வு அமையப் பெறுவதற்கே இருவரும் ஒன்று கூட வேண்டும். இல்லற வாழ்வில் இருவருமே தலைவர்கள். கணவன் தலைவன்; மனைவி தலைவி. கணவன் தலைவி என்றால் மனைவி அடிமையல்லள்; மனைவி தலைவி என்றால் கணவன் அடிமையல்லன்; இருவருமே தலைமைப் பொறுப்புக்கும் பெருமைக்கும் உரியவர்கள். இல்லற வாழ்வு இனிமை பொருந்த நடை பெற வேண்டுமென்றால் இருவர் துணையும் வேண்டும். ஆயினும், இல்லறத்தில் தலைவனைவிடத் தலைவிக்கே பொறுப்பும் கடமையும் மிகுதி. அவளே இல்லில் தங்கி இல்லறம் ஓம்புதலில் இடையறாது ஈடுபடும் நிலைக்குரியவளாகிவிட்டாள். ஆகவே "இல்லாள்' (=வீட்டிற்குரிவள்) என்றும், "மனைவி' (=மனைக்குரியவள்) என்றும் அழைக்கப்படும் சிறப்புக்குரியவளாகி விட்டாள். "இல்லான்'"மனைவன்'என்றுதலைவனை அழைத்தல்இல்லையன்றோ? ஆகவே, இல்லற வாழ்வு இனிது நடைபெறத் துணையாய் இருக்கும் அவள் வாழ்க்கைத் துணை

என்று அழைக்கப்படும் சிறப்புக்குரியவளாகியுள்ளாள். இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியின் சிறப்புக்களைத் தொகுத்துரைப்பதே வாழ்க்கைத்துணை நலம் என்ற பகுதி.

"மனைக்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" ( குறள்:51)

வேண்டின்உண் டாகத் துறக்க; துறந்தபின்
ஈண்டு இயற்பால பல. (குறள் 342)

ஆகவே, சங்க காலத்திலும், வள்ளுவர் காலத்திலும், திருமணம் செய்துகொண்டு மனைவி மக்களுடன் இல்லறத்தில் வாழ்வதுதான் தமிழர்களின் வாழ்க்கை நெறி. தமிழர்களிடையே, பிரமச்சரியம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற வாழ்க்கை நிலைகள் இருந்ததாகத் தெரியவில்லை. அந்த வாழ்க்கை முறைகள் தேவையற்றவை என்ற கருத்தையும், இல்லறமே நல்லறம் என்ற கருத்தையும் திருக்குறளில் காண்கிறோம்.

"ஒருவன் இல்வாழ்க்கையை அதற்குரிய அறநெறிப்படி நடத்துவானாயின் அதற்குப் புறம்பாகிய (பிரமச்சரியம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் போன்ற) வேறுநெறிகளைப் பின்பற்றுவதால் பெறும் பயன் என்ன?" என்ற வினாவை வள்ளுவர் எழுப்புகிறார்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்? (குறள் 46)

மற்றவர்களை நல்லநெறியில் ஆற்றுப்படுத்தி, அறம் தவறாத வாழ்க்கை நடத்தும் இல்லறம், தவம் புரிபவர்களின் தவத்தைவிட வலிமையானது.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. (குறள் 48)

மேலே குறிப்பிடப்பட்ட குறட்பாக்களிலிருந்து, பிரமச்சரியம், வானப்பிரஸ்தம் சன்னியாசம் போன்ற நெறிகளைவிட இல்லறமே சிறந்தது என்பது வள்ளுவரின் கருத்து என்பது தெளிவாகத் தெரிகிறது. மற்ற நெறிகளைவிட இல்லறம்தான் சிறந்தது என்று கூறுவதோடு நிறுத்தாமல், அறம் என்றாலே இல்லறம்தான் என்றும் வள்ளுவர் கூறுகிறார். அந்த இல்லறமும் பிறரின் பழிக்கு இடமில்லாமல் நடத்தப்பட்டால் மிகச் சிறந்தது என்ற கருத்தும் குறளில் காணப்படுகிறது.

இல்வாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், வேறு (வானப்பிரஸ்தம் மற்றும் சன்னியாசம் போன்ற) வழிகளில் வாழ முயல்பவர்களைவிடச் சிறந்தவன் என்ற கருத்தையும் குறளில் காணாலாம்.

அறன்எனப் பட்டதே இல்வாழக்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. (குறள் 49)

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. (குறள் 47)

இல்லற வாழ்க்கையில் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து அன்போடு வாழ்வதும், அவர்கள் இருவரும் தங்கள் குழந்தைகள் மற்றும் உற்றார் உறவினர் அனைவரோடும் அன்போடு வாழ்வதும் இல்லறத்தின் பண்பு. இல்லற வாழ்க்கை நடத்துபவர்கள் மற்றவர்களிடம் அன்பு காட்டுவது மட்டுமல்லாமல்தனிமனித வாழ்வில் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய ஒன்று இல்லறமாகும். இல்லறத்தின் வழியாகத்தான் இன்பந்துய்க்க முடியும். பொருளின்பமானாலும் சரி, வீடு பேற்றின்பமானாலும் சரி இல்லறமே வாழ்வின் முதல் படி அறத்தான் வருவதே இன்பம்

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல" (குறள் 39)

ஒருவன் செய்யும் அறத்தால் கிடைக்கும் இன்பமே மிகுந்த பெருமைக்குரியதாகும். மற்ற எல்லா செயல்களுக்காகவும் கிடைக்கும் புகழ் இன்பமுடையதாக இருந்தாலும் அது சிறந்த புகழாகது.

**மனைமாட்சி**

குடும்பத்திற்கு தேவையான நல்ல குணங்கள் இல்லாத மனைவியை பெற்ற யாருக்கும் மற்ற வழிகளில் கிடைக்கும் சிறப்பான புகழ் பெருமை யாவும் பயன்யில்லாமல் போய்விடும்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் துயினும் இல்". (குறள்52)

மக்களுக்கு மங்களகரமான மகிழ்ச்சியை அளிப்பது குடும்ப வாழ்க்கை. அதில் தங்களுக்கான வருங்கால சந்த்திகளை உருவாக்கும் மக்கட்பேறு மேலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (குறள்60)

தொகுப்புரை

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருளின் வழி அறத்தின் வழியே பொருள் தேடி இன்பம் துய்த்து இல்லறத்தை நல்லறமாய் பேணுவதே தமிழரின் கடைமையாகக் கொள்ளப்பட்டதைத் திருக்குறள் எடுத்தியம்புவதுத் தெள்ளதெளிவாகிறது

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா


உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

## உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)



தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**

**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை
வள்ளுவமும் வாழ்வியலும்
(ஆய்வுக் கட்டுரைகள்)

தொகுப்பாசிரியர்கள் : உடையார்கோயில் குணா

பதிப்பாசிரியர்கள் : முனைவர் ப.ஸ்ரீதேவி
முனைவர் பா.பத்மபிரியா
திருமதி ர.கண்ணகி
முனைவர் மா.கிருஷ்ணவேணி
பேரா. தி.தமிழ்ச்செல்வி
முனைவர் ந.சுமதி
செல்வி ந.காருண்யா

மொழி : தமிழ்

முதல் பதிப்பு : ஜூன் 2022

உரிமை-வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன்கோயில்,
தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு
கைப்பேசி : 0091 75 3000 2454
0091 94 4393 8797
மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com

அளவு : டெம்மி 1 X 8

பக்கங்கள் : XIV + 274

விலை : ரூ.350/-

ISBN : 978-81-909877-8-3

நூல் வடிவமைப்பு : தங்கம் வரைகலையகம், சென்னை-35

அச்சாக்கம் : மாணவர் நகலகம், சென்னை-01

# திருக்குறளில் அரசியல் சிந்தனைகள்

முனைவர் **மு.திரிபுரசுந்தரி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
திருச்சி 2.

### முகவுரை

மானுட வாழ்வை நெறிப்படுத்தம் ஆற்றல் அறநூல்களுக்கு உண்டு. அதில் முதலாவதாக விளங்குவது திருக்குறள் ஆகும். திருக்குறள் மக்களின் வாழ்வியல் குறி;த்து கூறப்பட்டுள்ள கருத்துக்கள் எக்காலத்துக்கும் ஏற்றவை ஆகும். அதனால்தான் அதை பொதுமறை என அழைக்கின்றோம். பொருட்பாலில் அரசு இயல்,அமைச்சு இயல்,ஒழிபு இயல் ஆகிய இயல்கள் நாடு,அதன் அரசு குடிகள் பற்றியும் எடுத்துரைக்கின்றது இருபத்தைந்து அதிகாரங்கள் அரசு பற்றியும்,முப்பத்திரண்டு அதிகாரங்கள் அமைச்சு இயல் பற்றியும் பதின்மூன்று அதிகாரங்கள் ஒழிபு இயல் பற்றியும் குறிப்பிடுகின்றன. திருக்குறளில் அரசியல் குறித்த செய்திகளை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### அரசு

"ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் மீது தன்னாட்சி செய்யும் அரசியல் சங்கமே அல்லது கழகமே (Association)

அரசாகும்". கிரேக்கர்கள் முதன்முதலாக தங்களது அரசியல் நிறுவனத்தை 'பாலிஸ்' murpay என அழைத்தனர். இதற்கு 'நகர அரசு' (City State) என்று பொருள். அரசியல் என்பது அரசனின் ஆட்சிமுறையில் செயல்படுவதாகும் அரசு நான்கு முக்கிய பண்புகளை பெற்றிருக்க வேண்டும். அவை மக்கள்தொகை,நிலப்பரப்பு,அரசாங்கமஐஐ; இறைமை ஆகும். இதில் மக்கள்தொகையும் நிலப்பரப்பும் சேர்ந்ததுதான் அரசாங்கம் ஆகும். அரசாங்கத்தின் மூலம் மக்களின் பொது விருப்பங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அரசு என்னும் கோட்பாட்டு நிலை,வள்ளுவரின் சமகாலத்தவர்களான கிரேக்கர்களும் உரோமர்களும் மட்டுமின்றி சீனர்களும் கொண்டிருந்தனர் என்பதனை வரலாறு தருகின்றது. அரசு என்பது தன்னிறைமை உள்ள ஒரு வரையறுக்கப்பட்ட நாட்டையும் முழு உரிமையுடை அரசாங்கத்தையும் மக்களையும் கொண்டது என வரையறுக்கப்படுகின்றது.

**அரசின் அமைப்பு**

ஒரு அரசு எப்படி அமைய வேண்டும் என்பதை இறைமாட்சியில் வள்ளுவர் கூறுகின்றார். ஒரு அரசானது சிறந்த படைபலம்;,குடிமக்கள் உணவுப்பொருள்கள் அமைச்சர் பிற நாடுகளுடன் நட்பு பாதுகாப்பு ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். இதனை

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்ற குறள் எடுத்துரைக்கும். ஒரு நாட்டில் அரசானது நல்லாட்சி செய்தால்தான் அது நல் அரசாகும். எல்லா வளங்களும்; ஒருநாட்டில் இருந்தாலும் நல்ல அரசமைப்பே பயன்தரும் என்பதை

"ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயன்;இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு"

என்று குறளில் ஒரு நாட்டில் நல்ல அரசனின் ஆட்சி அமையாவிட்டால் தேவைக்கேற்ற எல்லா வளங்களையும் உடையதாக இருந்தாலும் அந்த அரசால் பயனில்லை எனபதை அறியலாம்.

**சர்வதிகார ஆட்சி**

மன்னன் தனக்கு சேரவேண்டிய வரி அல்லாத பிற பொருளை மக்களிடத்தில் விரும்பி பெறுதல் கூடாது.

மக்களை வருத்தி வரி வசூல் செய்தால் அது காட்டில் வேல் வைத்துக்கொண்டு பொருளைக் கொடு எனப் பறிக்கும் கள்வரைப்போல் மன்னன் இருப்பதற்கு ஒப்பாகும் என்கிறார். அதாவது அளவுகடந்து வரிவசூல் செய்வது களவு செய்வதற்கு ஒப்பாகும் என்பதை,

"வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

முறைசெய்யும் மன்னன் நெறிதவறி வரி அதிகமாக வாங்கினால் மன்னன் காட்டில் வாழும் கள்வர்களின் குணத்தை பெற்றததைப்போல் ஆகிவிடும் என எச்சரிக்கை செய்கிறார்.

**நல்லாட்சி**

மழைத்துளி இல்லாவிட்டால் உலகம் பெரும் துன்பத்தை அடைவதைபோல் அருள் இல்லாத அரசனின் ஆட்சியில் மக்கள் பெரும் துன்பத்தை அடைவார்கள். மழைநீர் இன்றி உலக உயிர்இல்லை அதுபோல அருள் இல்லா மன்னன் நீதி தவறி நடந்தால் மக்களும் துன்படுவர் என்கிறார். இதை

"துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றஅற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு"

என்ற குறள்வழி அறியமுடிகின்றது.

**மன்னனின் தகுதிகள்**

நாட்டை ஆட்சி செய்யும் மன்னன் சிறந்தவனாக இருந்தால்தான் அந்நாடு முன்னேற்ற பாதையில் செல்லும்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

என்ற குறள்களில் மன்னன் அச்சம் இல்லாமல் இருத்தல், வறியவனுக்கு உதவுதல், அறிவு, ஊக்கமுடன் இருத்தல் ஆகிய நான்கு குணங்களும், விழிப்புடன் இருத்தல் கல்வி துணிவு ஆகிய மூன்று பண்புகளும் மனதளவில் பெற்ற மன்னன் சிறந்த மன்னனாக இருப்பான் என்கிறது குறள்;.

மன்னன் மனதளவில் மட்டுமின்றி மக்களைக் காக்கும் பொருட்டு புறநிலையிலும் சிறந்தவனாக இருத்தல் வேண்டும் என்பதை,

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"

காட்சிக்கு எளியனாகவும்,கடுஞ்சொல் பேசாதவனாகவும் கொடை அளி(இரக்க குணம்) நீதி தவறாமை மக்களை பாதுகாத்தல் எனும் நான்கையும் புறவழியில் மன்னன் பெற்றிருந்தால் அவனே சிறந்த மன்னனாவான் என குறள் இயம்புகிறது.

**பொதுவுடைமை ஆட்சி**

நாட்டை ஆள்பவன் எல்லோரிடத்திலும் பாரபட்சம் பார்க்காமல் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து ஒரு சார்பாக இ;ல்லாமல் நடுநிலைமை பொருந்தி தக்கதை ஆராய்ந்து ஆட்சி செய்வதே முறையான பொதுவுடைமை ஆட்சி என்பதை,

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய் வஃதே முறை"

என்ற குறள் எது நல்லாட்சி என்பதைச் சுட்டிச்செல்கிறது. அறம் தவறும் மன்னன் விரைவில் அழிவான் என்பதை,

"வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

என்ற குறள் அறம்தவறி குடிமக்கள் அஞ்சும்படி ஆட்சிபுரியும் கொடுங்கோல் மன்னன் விரைந்து அழிவான் என்கிறது.

**நாடு**

நாடு என்பது வெறும் நிலப்பகுதி மட்டுமல்ல. அந்நிலத்தில் வாழும் மக்களையும் சேர்த்துக் குறிப்பதே நாடாகும். ஒரு நாடு சிறந்த நாடு எனப் பலராலும் போற்றப்படுவதற்குக் காரணம் அங்கு வாழும் மக்களின் இயல்பைப் பொறுத்தே அமையும். நிலத்தில் வாழும் மக்கள் நல்லவர்களாக இருந்தால் அந்தநாடும் நல்ல நாடு எனச் சிறப்புறும். இதை புறநானூற்றுப் பாடல்,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்;லை நாழிய நிலனே"

என்ற பாடல் நிலமே நீ நாடாக இருந்தாலும்,காடாக இருந்தாலும்,பள்ளமாக இருந்தாலும்,மேடாக இருந்தாலும் ஒரு பொருட்டன்று. உன்னிடம் இருக்கும் மக்கள் எந்த அளவுக்கு நல்லவர்களாக இருக்கின்றார்களோ நீ அந்த அளவுக்கு போற்றப்படுவாய் என்கிறது புறநானூறு. திருக்குறள் நாடானது வளமுடையதாய்; இருக்கவேண்டும். நாடு என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணத்தைஐஐ

"நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளம்தரு நாடு"

என்று திருக்குறள்,மக்களின் தேவைகள் அனைத்தையும்; பூர்த்தி செய்வதும் இயற்கையான வளங்களையும் கொண்டது சிறந்த நாடாகும் எனக் கூறும்.

முடிவுரை

திருக்குறள் அறம் கூறும் நூலாக இருந்தாலும் அரசியல் செய்திகளையும் எடுத்துரைக்கும் நூலாகவும் விளங்குகிறது. மன்னனின் தகுதிகள்,நாடு,மன்னன் ஆட்சி செய்யும் முறை ஆகியன எடுத்தியம்பெற்றுள்ளன. குறள் தரும் அரசியல் சிந்தனைகள் எக்காலத்திற்கும் ஏற்றதொரு வழிகாட்டி நூல் என்பதை நாம் அறியலாம்.



உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)


தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கன்னகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா



உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

# உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**



**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | உடையார்கோயில் குணா |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ப.ஸ்ரீதேவி<br>முனைவர் பா.பத்மபிரியா<br>திருமதி ர.கண்ணகி<br>முனைவர் மா.கிருஷ்ணவேணி<br>பேரா. தி.தமிழ்ச்செல்வி<br>முனைவர் ந.சுமதி<br>செல்வி ந.காருண்யா |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# குறளின் குரல்

முனைவர் **பா. பத்மபிரியா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி,
திருச்சி 2.

உலகிடை முகிழ்த்த பல்வேறு மொழிகளுள் உயிரினில் உணர்வாகவும், உணர்வினில் உயிராகவும் விளங்குவது தமிழ்மொழியாகும் தமிழின் சிறப்புக்களை நாள்தோறும் காலந்தோறும் நவின்று நிற்கும் இலக்கியங்கள் பலவாகும். அவற்றுள் காலத்தால் விஞ்சி நிற்பது சிலவாகும். அன்னைத் தமிழின் அணிகெழு தன்மையினை தனது சிறிய அடிகளால் பெரிதாக உணர்த்தி உயர்ந்து சிறந்து விளங்குவது வள்ளுவத்தின் எனில் மிகையாகாது.

"தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும் ஏனோருக்கு
ஊழின் உரைத்தாற்கும் ஏண்ணா முகிலுக்கும்
வாழிஉல கென்னாற்றும் மற்று"

என்ற நக்கீரர் கூற்று வள்ளுவத்தின் சிறப்பினை நம்மிடையே உணாத்தி நிற்கும். உலகப் பொதுமறையாம் வள்ளுவத்தின் பால் இல்லாத கருத்து புறத்தொன்று கிடையாது. அறவுரையாயினும் அறிவுரையாயினும், அரசனுக்காகிலும், ஆன்றோர்க்காகிலும் தன்னிடை பொதுளிக் கொண்டுள்ள தன்மையுடைத்தாய் விளங்குவது வள்ளுவத்தின் மாண்பாகும்.

ஏதிர்வரும் காலங்களில் நீரியையும், நெறிமுறைகளையும் வாழ்வில் விழுமியங்களையும் எடுத்துரைப்பதற்கு எஞ்சியுள்ள நூலாக தமிழ்கூறு நல்லுலகில் வள்ளுவத்தி குரல் ஒலிக்கும்.

**வள்ளுவம் வாழ்வியல் இலக்கியம்**

உலகின் தோன்றிய மனிதன் தனது சிறப்பினை தனது வாழ்வியலை இலக்கியமாக எடுத்துரைக்க விழைந்தான். அவ்வெண்ணத்தின் வெளிப்பாடே தன்னிகரில்லா தமிழ் இலக்கியங்கள், இலக்கியம் வாழ்வின் கண்ணாடி. வாழ்வியலின் இன்ப துன்ப நிகழ்வுகளை பறைசாற்றும் இலக்கியங்கள் என்றென்றும் காலங்கடந்த நிலையில் மேன்மையுற்று விளங்குகின்றன. ஏனெனில் வாழ்வியலின் எதார்த்தத்தை எடுத்துரைக்கும் இலக்கியங்களை மனிதன் என்றும் புறக்கணிப்பது கிடையாது.

மனிதனின் முழு முதல் ஆதாரம் திடமான நோயற்ற உடல், உடல் சிறப்பாக இயங்க போதிய முயற்சியும், பயிற்சியும் இருத்தல் சிறப்பு. இதனை எளிய நடையில்

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'**

என்று குறிப்பிடலாம். இக்கருத்தினை எளிய முறையில் வள்ளுவப் பேராசான்,

**"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பக் கொளல்"**

என்று தனது குறளின் மூலம் உலகிற்கு உரத்த குரலில் முழக்கமிடுகிறார்.

**உணவே மருந்து; மருந்தே உணவு :**

உணவை மருந்தாகவும் உழைப்பை உரமாகவும் கொண்டு உடலை ஓம்பியவர்கள் நம் முன்னோர்கள். இதனை வலியுறுத்தவே திருமூலரும்,

"உடம்பை வளாத்தேன் உயிர வளாத்தேனே" என மொழிந்தார். சரியான நேரத்தில் சரியான விகிதத்தில் உட்கொள்ளும் உணவு மனிதனுக்கு ஊறு விளைவிக்காது என்பதனை வள்ளுவப் பெருந்தகை.

**"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளிமுதலா வெண்ணிய மூன்று"**

என எடுத்துரைக்கிறார். மேலும் எப்படி உணவையே மருந்தாக்குவது என்றால் ஒருமுறை உண்ட உணவானது நன்கு செரித்த பிறகு மறுமுறை உண்டால் அதுவே, அம்முறையே நமக்கு மருந்தாக அமையும் என்ற கருத்தினை,

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்திய**
**அற்றது போற்றி உணின்"**

என வரும் குறளின் மூலம் உணர்த்துகிறார்.

**வினையும் விளைவும்**

ஒருவன் செய்யும் செயலானது அவனுக்கு மகிழ்வையும் பிறருக்கு பெருமகிழ்வையும் தருவதாக அமைய வேண்டும். அவ்வாறு அமையவில்லை எனில் அச்செயலால் பயன் எதுவும் கிடையாது. ஒருவருடைய வடிவினால் என்றும் பெருமையும் சிறுமையும் அமையாது. அவர்களது செயலைக் கொண்டே பெருமையும் புகழும் கிட்டும் இக்கருத்தை மனத்தில் நிறுத்தியே,

**"தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சத்தாள் காணப்படும்"**

என வள்ளுவர் எடுத்துரைக்கிறார். மேலும்,

**"கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன**
**வினைபடு பாலால் கொளல்"**

என்ற குறளில் கருவிக்கும் செயலுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிச் செல்கிறார்.

இக்குறட்பாக்களைப் போலவே ஒருவனது செயல் முதலில் அவனது மனசாட்சிக்கு அஞ்சியதாக இருக்க வேண்டும். தனக்கு உண்மையானவனாக இருப்பது ஆகச் சிறந்த ஒழுக்கமாகும் என்று பொருள்படுமாறு

**"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்"**

என எடுத்துரைப்பது வள்ளுவரின் பொதுமை நோக்கினை பறைசாற்றுவதாக அமைகிறது. இன்றளவில் இந்தியா ஒரு பண்பாட்டு பெட்டகமாக மிளிர்வதற்கு வள்ளுவனின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாக அமைகின்றது.

உள்ளமும் உயர்வும் :

உடலும் உள்ளமும் ஒருசேர இயங்குதல் என்பது நோயற்ற வாழ்விற்கான அடிப்படையாகும். இவை இரண்டும் ஒரே நோக்கோட்டில் பயணிக்கும் பொழுது மனிதன் பல உன்னதங்களை உணர முடியும். இதனையே வள்ளலாரும்,

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் தம்
உறவு கலவாமை வேண்டும்"

என மொழிந்தார்.

எண்ணங்களே வாழ்வின் ஏணிப்படிகள். எண்ணங்களின் பிறப்பு உள்ளமாக அமைகின்றது. ஆக தூய்மையான எண்ணங்கள் தோற்றம் பெற உள்ளத்தின் தூய்மை தேவையாகின்றது. இதனை அனைவரும் உணருமாறு.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
தேவையாகின்றது. இதனை அனைவரும் உணருமாறு"

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தாதம்
உள்ளத் தனைய துயர்வு"

என்ற குறள்களின் மூலம் எடுத்துரைக்கிறார். மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. மனிதன் செம்மையுற மனம் தூய்மையுற வேண்டும். உள்ளம் தெளிவாக தூய்மையோடு இருக்கின்ற மனிதன் சமூகத்தின் ஆகச் சிறந்த பொறுப்பாளியாகின்றான். எனவே வாழ்வின் உயரம் என்பது உள்ளத்தின் உயர்வைப் பொறுத்தே என்பது வள்ளுவரின் குரலாகும்.

**வாழ்வின் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்**

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பது அனைவரும் அறிந்ததாகும். சமூகத்தைச் சார்ந்து வாழும் பொழுது சமூகப் பிரச்சனைகளையும் எதிர்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் போராடவும் மிகச் சிறந்த பயிற்றுவிப்பாளராக வள்ளுவர் விளங்குகிறார்.

அன்பினை ஆதாரமாகக் கொண்டு விளங்கினால் மனிதம் தழைக்கும். உட்பூசல்கள் குறையும். இதனை

எடுத்துரைக்கும் விதமாக செந்நாப் போதார் படைத்த சிறந்த குறட்பாக்கள்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"

"அன்பின் அறனும் உடைத்தாயின்"

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

போன்றனவாக விளங்குகின்றன.

விருந்தினர்களை உபசரிக்கும் திறனை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**

என்ற குறளில் காட்டிச் செல்கிறார். இதனைத் தொடர்ந்து ஒருவன் பின்பற்ற வேண்டிய வாய்மையினை,

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்"**

என்று அறிவுரையாக முன்வைக்கிறார்.

இதனோடு மட்டுமின்றி புலால் மறுத்தல், வெகுளாமை, கூடா ஒழுக்கம், பிறன்இல் விழையாமை போன்ற அதிகாரங்கள் இன்றைய தலைமுறையினர் தவறாமல் கற்றுத் தெளிய வேண்டிய பகுதிகளாகும்.

தற்போது தலைவிரித்து ஆடுகின்ற பிரச்சனையான மதுவின் தடுப்பினை என்றோ "கள்ளுண்ணாமை" என்று கூக்குரலிட்டுள்ளார் என் பாட்டன் வள்ளுவன் எனில் அது மிகையாகாது. இதற்குச் தக்கதொரு சான்றாக வள்ளுவர் எடுத்துரைக்கும் குறள்.

**"கள் உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்**
**உள்ளான்கொல் உண்டதன் சோர்வு"**

கள் குடிக்க எண்ணுபவன் தான் கள்ளுண்ணாமல் இருக்கும் பொழுது கள்குடிப்பவனைப் பார்த்து தானும் கள் உண்ணும் பொழுது இந்த நிலையே என்று வருந்தி நிற்பதனை சுட்டிக் காட்டுகிறார்.

இவ்வாறு வாழ்வின் பல்வேறு சூழல்களுக்கும் வள்ளுவத்தின் பதிலும் குரலும் என்றென்றும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

தனிமனிதனுக்கு மட்டுமின்றி அகவாழ்க்கைக்கும் அரசனுக்கும், இன்ன பிற பொதுமை கருத்துக்களை தன் குறளால் எடுத்துரைத்த வள்ளுவர் என்றென்றும் தெய்வப் புலவராக திகழ்வார் என்பது மாற்றுக் கருத்து கிடையாது.

**நிறைவாக :**

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

என்ற பாடல் வள்ளுவத்தின் வான்புகழை தெள்ளிதின் விளக்கி நிற்பதாகும். மொழி, இனம், மதம் என்னும் எல்லைக்களுக்கு அப்பால் முப்பால் மொழிந்த முதற்புவெலர். ஆரிதெனப் பிறந்திட்ட மானுடன் எவ்வாறெல்லாம் நெறிமுறைகளோடு வாழ வேண்டும் என்ப தனை உலக மக்களுக்கும் ஒப்பும்படி அறம், பொருள், இன்பமென பகுத்து பண்பும் பயனும் விளையுமாறு பொதுமை அறம் வகுத்தளித்தார். மேலும் கடவுளை வணங்குவது, இல்லறம் பேணுவது, நாட்டினைப் பாதுகாப்பது, பொருளைச் சேர்ப்பது, வகுத்து செலவளிப்பது, சுற்றத்தாரைப் பேணுவது, மழலையின் மகிமை, அடக்கத்தின் மேன்மை, இடமறிந்து செயல்படுதல் போன்ற இன்னபிற வாழ்வியல் உட்கிடக்கைகளை தனக்குள் தாங்கி நிற்கிறது வள்ளுவம். ஆகையால் வள்ளுவரின் குறள் நெறிகளை இன்றைய இளைய தலைமுறையினர். பின்பற்றினால் பல்வேறு இன்னல்களில் இருந்து விடுபடுவர் என்பது திண்ணம். வாழ்க்கை என்பது அனுபவம் நிறைந்த சுற்றுலா போன்றது வள்ளுவம் சுற்றுலாவைச் சிறப்புடன் விளக்கி நிற்கும் வழிகாட்டி போன்றது. ஆகவே வள்ளுவத்தைக் கையில் எடுப்போம்; வாழ்வை மேம்படுத்துவோம். விடாமுயற்சியுடன் போராடுவோம். போராட்டத்தை தொடர வள்ளுவமே என்றென்றும் சிறந்த ஆயுதம் குறள் என்றும் மக்களின் குரலாக ஒளிக்கட்டும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ வள்ளுவத்தை
கையகத்து வைத்தல் சிறப்பு"



# உலகப் பொதுமறை
# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)


தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு -2022**

**மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா**


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

## உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா


**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | உடையார்கோயில் குணா |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ப.ஸ்ரீதேவி<br>முனைவர் பா.பத்மபிரியா<br>திருமதி ர.கண்ணகி<br>முனைவர் மா.கிருஷ்ணவேணி<br>பேரா. தி.தமிழ்ச்செல்வி<br>முனைவர் ந.சுமதி<br>செல்வி ந.காருண்யா |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# திருக்குறள் சுட்டும் விருந்தோம்பல் பண்பு

முனைவர் **மு.கவிதா**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத் துறை
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
திருச்சி.

**முன்னுரை:**

"கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி" என்று அனைவராலும் போற்றப்படும் தமிழ் மக்களின் பண்பாட்டின் விருந்தோம்பல் சிறப்பு மிக்கதாகும். பெண்ணின் அன்பு கலந்த உள்ள உறுதியும் ஆணின் நெஞ்சகப் பிணைப்பும் இணைந்தே இல்லறமாகும். இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரை அகமும் புறமும் மலர வரவேற்று இன்மொழி கூறி உபசரித்துப் போற்றுவதே விருந்தோம்பல் ஆகும். வாழ்வியல் கூறுகளைக் கற்றுத் தரும் வாழ்வின் நெறியான உலகப்பொதுமறையான திருக்குறள் விருந்தோம்பலைச் சிறப்பாக கூறியிருக்கின்றது. பண்டையத் தமிழர்கள் இல்வாழ்க்கை கடமைகளில் விருந்தோம்பலை முதன்மையாகவும் தலையாயதாகவும் உடைய பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக கொண்டிருந்தனர் என்பதைத் திருக்குறளும் தெளிவுப்படுத்துகின்றது.

**விருந்தோம்பலின் சிறப்பு:**

விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டதால் விருந்து என்பது தோன்றியது.உயிர்காக்கும் மருந்தாக இருந்தாலும் அதை விருந்துடன் பகிர்ந்து கொள்வதே சிறப்பானது. விருந்தை எதிர்பார்ப்பவர் வறுமைக்கு ஒருபோதும் ஆட்படமாட்டார்.வேள்வியை விட விருந்தோம்பலே மேன்மையானதாகும். இத்தகைய சிறப்பு மிக்க விருந்தோம்பல் தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகும். நாம் உண்கின்ற உணவைப் புதிதாக வருபவர்களுக்குக் கொடுத்து உபசரிக்கும் பண்பு ' விருந்தோம்பல்' ஆகும். அவ்வாறு செய்யும் போது தானமும் தர்மமும் தலைகாக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

"இருந்தோம்பி இல்வாழ்வதவல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'' (குறள் எண்:81)

வீட்டில் இருந்து பொருட்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்வதற்கே என்று வள்ளுவர் சுட்டியுள்ளார்.

'விழுப்புண் பாடத நாளெல்லாம் வீழ்நாள்'

என்று மறவன் கூறுவது போல் விருந்தினர் வாரா நாளெல்லாம் வீண் நாளாகப் பண்டையத் தமிழர்கள் கருதினர். கிடைத்ததற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் விருந்தினர்களோடு பகுத்துண்டனர் என்பதை

"இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்
இனிதெனத் தமியர் உண்டாலும் இலரே" (புறம் 182)

எனப் புறநானூறு சுட்டுகின்றது. அதியமான் கிடைத்தற்கரிய நெல்லிக்கனி கிடைத்தும் தான் உண்டு நீடித்து வாழாமல் ஔவையார்க்கு அளித்த பண்பு விருந்தோம்பலின் சிறப்பினைக் காட்டுகின்றது.

**விருந்தினரைப் பேணுதல்:**

பசியோடு வந்த விருந்தினர் இருக்கும்போது தனித்து உண்ணாமல் வீட்டுக்கு வந்த விருந்தினரைப் பேணுதல் சிறப்பாகும். நாள்தோறும் உபசரிப்பவருக்கு அவ்விருந்து உபசரிப்பதால் செல்வம் குறையாமல் மேன்மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பதை

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று" (குறள் எண்: 83)

என்ற குறளில் வள்ளுவர் சுட்டியிருக்கின்றார்.

மனைவியோடு காட்டிற்குச் செல்லாது வீட்டிலேயே இருந்து கொண்டு பொருள்களைத் தேடி வாழும் வாழ்க்கை விருந்தினரைப் பேணி அவர்க்கு விருந்து அளிப்பதற்காகவே ஆகும். விருந்தினரைப் பேணாவிடில் இல்லறத்தில் இருந்தாலும் பொருள் செய்தலும் அவற்றின் காரணமாக வரும் எண்ணங்களும் பயனில்லாமல் போகும். இதனை

"உடைமையுள் இன்மை விருந்தோமல் ஓம்பா
மடைமை மடவர்கண் உண்டு". (குறள் எண்: 89)

என்ற குறள் எடுத்துரைக்கின்றது.

மனமகிழ்ச்சியை முகமகிழ்ச்சியால் காட்டி விருந்தினரை வரவேற்பவர் வீட்டில் அமர்ந்து செல்வம் எனும் திருமகள் வாழ்வாள் என்பதை

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்". (குறள் எண்: 84)

என்ற குறள் விளக்குகின்றது.

**விருந்தோம்பலும் அறிவியலும்:**

தமிழர்களின் ஒவ்வோரு கலாச்சாரப் பின்னணிலும் ஓர் அறிவியல் உள்ளது. வரும் விருந்தினர்களுக்கு வாயில்களில் நீர் வைக்கப் பட்டிருக்கும். நீரில் விருந்தினர்கள் கை கால்களைக் கழுவிய பின்னர் உள்ளே வருவர்.

பெரும்பாலும் கை கால்களிலுள்ள கிருமிகளால் நோய் தொற்று ஏற்படும். சுத்தப்படுத்துவது மூலம் நோய்த்தொற்று தடுக்கப்படுகின்றது என்ற அறிவியல் உண்மை தென்படுகின்றது.

வாழை இலையில் உணவு பரிமாறும் வழக்கத்தைத் தமிழர்கள் பின்பற்றினர். வாழை இலையில் குறுகிய பாகம் அமர்ந்து இருப்பவர்களின் இடது புறமும் தடிமனான பகுதி வலதுபுறமாகவும் வைக்கப்படும்.

சாதம்,கூட்டு வகைகள் இலையின் தடிமனான பகுதியில் வைக்கப்பட்டும்,ஊறுகாய் உப்பு போன்றவை இடது புறமாக வைக்கப்பட்டும் இருக்கும் என்று கூறுகின்றது.

**விருந்தினரை உபசரித்தல்:**

விருந்தினர் என்வபர் விருந்தாளிகள். இவர்களை வடநூலார் 'அதிதி' என்பர். விருந்தினரை உபசரிப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டியவை விருந்தினர் சற்றுத் தூரத்தில் இருக்கும் போது அவர்களைப் பார்த்தவுடன் முகம் மலர்தல் வேண்டும். முகம் மலர்வதால் விருந்தினர் நெருங்கி வருவார்கள். அப்படி நெருங்கி வந்ததும் இனியச் சொற்களைக் கூறி உபசரித்தல் வேண்டும். முகம் மலர்தல் இல்லை என்றால் விருந்தினர் தூரத்தில் இருக்கும் போதே மனம் வாடி திரும்பிப் போய் விடுவர்.

" மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து". (குறள் எண்: 90)

அனிச்ச மலரை தொடக்கூட வேண்டாம் முகர்ந்தாலே வாடிவிடும். அவ்வளவு மென்மையானது அனிச்சம். அதுப்போல வரும் விருந்தினர்களிடம் முகம் சலித்தோ அல்லது வேறுபட்டோ இன்முகம் காண்பிக்காமல் வரவேற்றாலோ அல்லது விருந்தளித்தாலோ விருந்தினர்களுக்கு வருத்தத்தை தந்துவிடும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

விருந்தினரை உபசரித்தல் என்ற பண்பாடு அறத்தை ஆணும் பெண்ணுமாக இணைந்தே செயல்படுத்தியுள்ளனர். இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிப்பது உயரிய பண்பாகும். இதனை

"விருந்தே தானும்
புதுவது புனைந்து யாப்பின் மேற்றே"
(தொல்காப்பியம் செய்யுளியல் 231)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கூறியுள்ளதைக் காணமுடிகிறது. சங்க கால மகளிர் நள்ளரவில் விருந்தினர் வந்தாலும் முகம் திரிந்து நோக்காமல் அவர்களை எதிர் கொண்டு வரவேற்று உணவளித்தமையைக் கற்புடைமைக்குப் பொருத்திக் காட்டினர். எக்காலமும் விருந்திற்கு உகந்த காலமாக சுட்டப் பட்டுள்ளது. விருந்தின்ரை இன்முகத்துடன் வரவேற்ற மகளிரை 'முல்லை சான்ற கற்பினள்' என்று கூறியிருப்பதை

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்" (நற்றிணை 142)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றது.

விருந்து உபசரித்தலில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானதாகும். முகம் மலர்ந்து உபசரிக்கும் போது விருந்துப்பொருள் உப்பில்லாத கூழாக இருந்தாலும் சிறப்பானதாக இருக்கும்.

"ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி
உப்பில்லாத கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்"
(விவேக சிந்தாமணி)

என ' விவேக சிந்தாமணி' கூறுகின்றது.

**விருந்தோம்பல் என்னும் உயர் மாண்பு:**

உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத வந்தாரை வரவேற்று உபசரித்து அனுப்பும் வழக்கம் தமிழர்களுக்கும் உரியது. பசியோடும் களைப்போடும் வருபவர்களுக்கு உணவளிப்பது உயர்ந்த புண்ணியமாகும். அறியவர்கள், முதியவர்கள் பிறவிகுறைபாடு உடையவர்கள், நோயுற்றவர்கள் போன்றோருக்கு உணவளித்தல் சிறந்த அறம் என்று மணிமேகலை கூறியிருக்கின்றது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
(மணிமேகலை)

**இன்றைய சூழலில் விருந்தோம்பல்:**

தமிழரின் பாரம்பரியமான விருந்தோம்பல் இன்று மிகவும் அருகி போய்விட்டது. அடுத்தவர்களை உபசரிக்கும் பண்பு குறைந்து விட்டது. இன்றைய தொழில் நுட்ப உலகம் சமூக வலைதளங்கள் உறவுகளுக்கு இடையேயான நெருக்கத்தை குறைத்து ஒற்றுமை இல்லாத போலியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படையான உண்மையாகும். கிடைத்ததைப் பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" (குறள் எண்: 322)

என்று உலகுக்குக் கூறிய வள்ளுவரின் நெறியை இளைய சமுதாயத்தினர் என்றென்றும் நினைவில் கொண்டு ' விருந்தோம்பலை' கடைப்பிடிக்க வேண்டும்.

முடிவுரை:

நம் முன்னோர்கள் வந்த விருந்தினர்களை அன்பாக கவனித்து அனுப்பிவிட்டு, வருகின்ற விருந்தினர்களுக்காக வாசலிலே காத்திருந்து வாழ்ந்து வந்தனர். இத்தகைய பெருமைகள் நிறைந்த தமிழர்களாக இருக்கும் அனைவரும் பண்பாடு, கலாச்சாரம் பழக்க வழக்கங்கள் இவற்றையெல்லாம் கடைப்பிடித்து ' விருந்தோம்பலை' கைவிடாமல் பின்பற்றுவதே மூத்தோர்களுக்கு நாம் செய்யக் கூடிய தலையாய கடமையாக கொள்ளப்படுகின்றது. உலகிற்கு விருந்தோம்பல் பண்பை கற்றுக் கொடுத்த நம் முன்னோர்களின் பெருமை மங்காது. இன்றைய இளைய தலைமுறையினரும் பின்பற்றி நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

வாழ்க தமிழ்! வளர்க அதன் புகழ்!

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)



தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா

உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு -2022

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

# உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா


**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்

தலைப்பு : உலகப் பொதுமறை
வள்ளுவமும் வாழ்வியலும்
(ஆய்வுக் கட்டுரைகள்)

தொகுப்பாசிரியர்கள் : உடையார்கோயில் குணா

பதிப்பாசிரியர்கள் : முனைவர் ப.ஸ்ரீதேவி
முனைவர் பா.பத்மபிரியா
திருமதி ர.கண்ணகி
முனைவர் மா.கிருஷ்ணவேணி
பேரா. தி.தமிழ்ச்செல்வி
முனைவர் ந.சுமதி
செல்வி ந.காருண்யா

மொழி : தமிழ்

முதல் பதிப்பு : ஜூன் 2022

உரிமை-வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன்கோயில்,
தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு
கைப்பேசி : 0091 75 3000 2454
0091 94 4393 8797
மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com

அளவு : டெம்மி 1 X 8

பக்கங்கள் : XIV + 274

விலை : ரூ.350/-

ISBN : 978-81-909877-8-3

நூல் வடிவமைப்பு : தங்கம் வரைகலையகம், சென்னை-35

அச்சாக்கம் : மாணவர் நகலகம், சென்னை-01

# வான் இன்றி அமையாது ஒழுக்கு

திருமதி **ச.கண்ணம்மாள்**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
திருச்சிராப்பள்ளி-2

உலகத்தின் ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள் என்பது அனைவரும் அறிந்ததே. அதற்கான காரணங்களையும் பொருந்துரைகளையும் தமிழறிஞர்கள் மட்டுமன்றி மேலை நாட்டு அறிஞர்களும் விளக்கிச் செல்கின்றனர். இந்நூல் 'ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி வேதப்பொருளாய் மிக விளங்கும் வள்ளுவர் வாய்மொழி மாண்பு' என்ற மாங்குடி மருதனாரின் கூற்றிற்கிணங்க உலக மக்களின் வேதமாகப் போற்றப்படும் பெருமையுடைத்து. இக்கட்டுரை 'வான்சிறப்பு' அதிகாரக் கருத்துக்களை உலகியல் நோக்கில் ஆராய்வதாக அமைகின்றது.

**மழை அமிழ்தம்:**

மழைக்கு மயங்கா உயிர்கள் இல்லை. மழை ஓர் அதிசயம். அதிசயத்தை ஆராய முற்பட்டதன் விளைவே அறிவியல். அதனால் செயற்கை மழையை உருவாக்க முடியும். ஆனால் அனைத்திற்கும் ஆதார வித்து இயற்கையாகும். திருவள்ளுவர் மழையை "வான் அமிழ்தம்' என மேம்படுத்தி உரைக்கின்றார்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று" (கு.எண்:11)

உலகத்திற்கு வழங்கி உய்விப்பதனால் தான் அமிழ்தம் ஆயிற்று என்று அறுதியிட்டு உரைக்கின்றார். தமிழறிஞர் இலங்கை.ஜெயராஜ் அவர்கள் மழையை "இயற்கையின் அதி உயர் குறியீடு' என்கிறார்.

**வான்சிறப்பு:**

சங்க இலக்கியங்கள் அனைத்தும் நீர் வள வருணனையோடு தான் துவங்குகின்றன. நீரின்றி உலகம் இல்லை என்கிறது வள்ளுவம்.

"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு" (கு.எண்:20)

எனவே கடவுள் வாழ்த்திற்கு அடுத்ததாக வான் சிறப்பை வைத்துள்ளார் தெய்வப் புலவர். வான் சிறப்பு என்ற சொல்லாட்சி ஆகுபெயராகக் கொள்ளப்பட்டு, மழைக்குக் காரணமான மேகத்தின் சிறப்பாகவும் மேகத்தினின்று பெய்யும் மழையின் சிறப்பாகவும் பொருள் கொள்ள முடிகின்றது.

இவ்விடத்து, பரிமேலழகர் அவர்களின் அதிகார வைப்பிற்கான விளக்கம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது." அஃதாவது அக்கடவுளது ஆணையான் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம்,பொருள்,இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல்" எனக் காரணத்தைப் பொருத்தமுற உரைக்கின்றார்.

இதன் வழி, மனிதனால் எவ்வாற்றானும் சாதிக்க முடியாத செயல்களைச் சாதித்துக் காட்டும் மாபெரும் சக்தியை நம் முன்னோர்கள் 'இறைவன்' என்று இனம் சுட்டியுரைத்தனர். உலக இயக்கத்தினை நெறிப்படுத்தி உயிர்கள் உய்ய ஆணைப் பிறப்பிப்பவனாகவும் இறைவன் இருக்கின்றான் என்ற கருத்து பெறப்படுகின்றது. ஈண்டு, கடவுள் எப்போது, எச்சூழலில், எங்கனம் ஆணை பிறப்பிப்பார் என்ற ஐயம் எழுகின்றது.

அறநூல்களில் காலத்தால் முற்பட்ட திருக்குறளின் பொருண்மைகளைத் தாம் பின்னர் வந்த இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் விரித்துரைக்கின்றன. அவ்வழி, நான்மணிக்கடிகையின்

"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை; மழையும்
தவமிலார் இல்வழி இல்லை; தவமும்
அரசிலார் இல்வழி இல்லை; அரசும்
இல்வாழ்வார் இல்வழி இல்" (பா.எண்:46)

என்ற பாடல் மழைக்கும் இல்லறத்தார்க்குமானத் தொடர்பை விளக்குகிறது.

**இல்லறமும் துறவறமும்:**

'இல்லறமல்லது நல்லறமன்று', அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்' என்ற தொடர்களுக்கு ஏற்றாற்போல இல்லறத்தார்கள் முதன்மையானவர்கள்; அவர்களின் வழி அரசு; அரசின் வழி தவத்தோர்; தவத்தின் வழியே மழை: மழை வழியே தான் மாநிலம்.

"தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்" (கு.எண்:19)

தானம் செய்யும் இல்லறமும் தவம் செய்யும் துறவறமும் ஆகிய அறங்கள் மேலோங்கியிருப்பின் வானம் பொய்க்காது. இவ்வறங்கள் பிறழும் போது வறட்சி நிலவும். தனி மனித ஒழுக்கமே இரண்டு அறங்களுக்கும் தலையாயதாகும்.

"மின்னொடு வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர் வழிப் படூஉம் புணை போல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின்" (புறம்.192)

என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்தும் இங்கு ஒப்பத்தக்கது. நீரிலே செல்லும் தெப்பம் போலும் வாழ்க்கையும் முறைப்படியே அறநெறியில் செல்கின்றது.

**பெய்த்தலும் பொய்த்தலும்:**

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (கு.எண்:15)

மழை கொடுக்கவும் செய்யும்; எடுக்கவும் செய்யும். வானம் பொய்த்தால் ஆங்கே வறட்சி நிலவி ஒழுக்கம் கெடும். அத்துடன் பூசைகள் எதுவும் ஆற்றவொண்ணாது என்கிறார் திருவள்ளுவர்.

இவ்விடத்து ஆண்டாளின் வாய்மொழி நினைக்கற்பாலது. “தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து” என்பது திருப்பாவை.

உலகத் தண்ணீர் நாள், நீர் விழிப்புணர்வு, மழைநீர் சேமிப்பு என்று பேசினாலும் ஒழுக்கம் தவறின் அனைத்தும் தவறும் என்பதை வள்ளுவர் வான்சிறப்பில் வித்தாக விதைத்து விட்டு, அக்கருத்தொன்றை விவரிக்கவே மேலதிகாரங்களைப் படைத்துள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது.

“மனத்துக்கண் மாசிலனாகவும்,அறத்தான் வருவதே இன்பம்’ என்றுணர்ந்தும் வாழ முற்படுதலே அறம் மேலோங்க வழியாகும். இக்கட்டுரை கீழ்க்காணும் முடிபுகளைத் தருகிறது.

→ மழையே அனைத்திற்கும் அடிப்படை.
→ ஒழுக்கமே அனைத்து அறங்களுக்கும் முதன்மையானது.
→ தனி மனித ஒழுக்கம் பிறழ்ந்தால் வானம் பொய்க்கும்.
→ வானம் பொய்த்தால் ஒழுக்கம் கெடும்.
→ மழையும் ஒழுக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடைய அறங்களாகும்.



# உலகப் பொதுமறை
# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)

தொகுப்பாசிரியர்
**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்
முனைவர் **ப.ஸ்ரீதேவி**
முனைவர் **பா.பத்மபிரியா**
திருமதி **ர.கண்ணகி**
முனைவர் **மா.கிருஷ்ணவேணி**
பேரா. **தி.தமிழ்ச்செல்வி**
முனைவர் **ந.சுமதி**
செல்வி **ந.காருண்யா**

**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு-2022**
**மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா**

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50**

# உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)



தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**

**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை
வள்ளுவமும் வாழ்வியலும்
(ஆய்வுக் கட்டுரைகள்)

தொகுப்பாசிரியர்கள் : **உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் : முனைவர் **ப.ஸ்ரீதேவி**
முனைவர் **பா.பத்மபிரியா**
திருமதி **ர.கண்ணகி**
முனைவர் **மா.கிருஷ்ணவேணி**
பேரா. **தி.தமிழ்ச்செல்வி**
முனைவர் **ந.சுமதி**
செல்வி **ந.காருண்யா**

மொழி : தமிழ்

முதல் பதிப்பு : ஜூன் 2022

உரிமை-வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன்கோயில்,
தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு
கைப்பேசி : 0091 75 3000 2454
0091 94 4393 8797
மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com

அளவு : டெம்மி 1 X 8

பக்கங்கள் : XIV + 274

விலை : ரூ.350/-

ISBN : 978-81-909877-8-3

நூல் வடிவமைப்பு : தங்கம் வரைகலையகம், சென்னை-35

அச்சாக்கம் : மாணவர் நகலகம், சென்னை-01

# திருவள்ளுவரின் இயற்கை மருத்துவம்

**திருமதி அ.சங்கீதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
திருச்சிராப்பள்ளி

மனிதரை மனிதனாக்கி சான்றோன், தெய்வம் என்றும் உணர்த்தும் உயர் பண்பாட்டு களஞ்சியம் திருக்குறள். இதுவே உலகின் உன்னத அற நூல். அறிவுள்ள மனிதனை எதை உண்ண வேண்டும்,எப்படி உண்ண வேண்டும், எப்பொழுது உண்ண வேண்டும் என்பதை மறந்து வாழ்கின்றான். அதனால் திருவள்ளுவர் "மருந்து" என்ற அதிகாரத்தை படைத்தார். திருக்குறளில் 95 ம் அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக்களை ஒரு தலைசிறந்த இயற்கை மருத்துவம் என்பதை உணர முடியும். வள்ளுவர் வகுத்த மருத்துவத்தை கடைபிடித்தால் ஒருவன் நோயின்றி வாழ வழிமுறைகளை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.அவற்றைப் பற்றி தெளிவாக காணலாம்.

**அதிகார விளக்கம்**

மருந்து அதிகாரம் 941 ஆம் குறட்பாவில் இருந்து 950 ஆம் குறட்பா வரை மருத்துவம் சார்ந்தச் செய்திகள்

உள்ளன. இந்த அதிகாரம் படித்தால் உணவைப் பற்றி வள்ளுவர் பல உண்மைகள் கூறி உள்ளார். மருந்து என்னும் அதிகாரத்தில் முதல் ஏழு குறட்பாக்கள் வரை நோய் இல்லாமல் வாழ ஒருவன் எப்படி உண்ண வேண்டும் என்பதையும், எட்டாவது,ஒன்பதாவது குறட்பாக்களில் ஒரு மருத்துவம் எப்படி செயல்பட வேண்டும் என்பதையும் கடைசி குறளில் மருத்துவம் எப்படி நான்கு பிரிவுகளாக இயங்க வேண்டும் என்பதையும் வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

**அரிய கருத்து**

திருவள்ளுவர் முதல் குறளில்

“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று”

நம்மை ஆய்வுக்குட்படுத்தி மிகினும்,குறையினும் என்ற அரிய கருத்துகளை உள்ளடக்கி அறிந்து கொள்ளுமாறு செய்துள்ளார். “மருத்துவ நூலோர் வாதம்,பித்தம்,சிலோத்துவம் என எண்ணிய மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும், குறைத்தாலும் நோய் உண்டாகும்” என்பது மு.வ அவர்களின் கருத்தாகும். இவை மூன்றும் உண்டாகக் காரணம் நாம் உண்ணும் உணவே என்பது திருவள்ளுவரின் உட்கருத்தாகும். உணவும்,செயலும் மிகினும்,குறைத்தாலும் நோய் செய்யும் என்கிறார்.

**அறு சுவையும் நாடியும்**

இடது கையில் மூன்று நாடிகளில் மூன்று சுவையும் வலது கையில் மூன்று நாடிகளில் மூன்று சுவைகளும் ஆக ஆறு சுவைகளையும் நாடிகொண்டே அறியும் கலை போற்றுதலுக்கு உரியது. சம உணர்வுக் கொள்கையை திருவள்ளுவர் முன்பே உணர்த்தியுள்ளார். சித்தர்கள் இதில் கைதேர்தவர்கள்

துவர்ப்பு, புளிப்பு – வாதம்
உப்பும், கசப்பும் – பித்தம்
இனிப்பும், கார்ப்பும் – கபம்

இவற்றில்

வலது புற நாடியில் துவர்ப்பு, உப்பு, இனிப்பு ஆகிய மூன்றும் சுவைகளையும்

இடது புற நாடியில் புளிப்பு, கசப்பு, கார்ப்பு ஆகிய

மூன்றும் சுவைகளையும் உணர முடியும்.

ஆகவே உணவு மிகாமலும், குறையாமலும் சத்துள்ள சம விகித உணவு உண்பதால் நோய்கள் வராமல் காத்துக் கொள்ள முடியும் என்பது குறட்பாவில் மறைந்துள்ள கருத்தாகும்.

**உடம்பிற்கு மருந்து**

முன்பு உண்ட உணவு செரித்த தன்மையை

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
கற்றது போற்றி உணின்"

ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க உணவு உண்டால் உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியது இல்லை.அற்றது என்பது நீக்கிவிடுதல் என்ற சொல்லாகும்.

"செரிக்காத உணவும்
எரிக்காத சக்தியும்
சுடுகாட்டுத் தேரின்
இரு சக்கரங்கள்"

என்பது புதுக்கவிதை. உண்ட உணவு சக்தியாக எரிக்கப்பட்டு விட வேண்டும். செரிக்காத உணவு வாய் குமட்டி வாந்தியாக வெளிப்பட்டுவிட வேண்டும்.முன்பு உண்ட உணவு உடலுக்கு பயன்பட்ட பின்னர் உடலை விட்டு வெளியே வந்துவிட வேண்டும். அப்பொழுது உடலுக்கு நோய்கள் வராமல் காத்துக் கொள்ள முடியும்.

**வள்ளுவரின் ஆலோசனை**

"அற்றலால் அளவு அறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு"

என்று மருத்துவர் கூறும் ஆலோசனைகளைப் போல வள்ளுவர் கூறுகின்றார்.முன்பு உண்ட உணவு செரிக்கப்பட்டு குருதியில் சேர்ந்து செயல் இழந்து நம் உடலில் இருந்து நீங்கிய பின் அடுத்து உண்ண வேண்டும்.அளவோடு உண்ண வேண்டும்.

"அற்றது அறிந்து கடைப்பிடித்துமாறு அல்ல
துய்க்க துவரப் பசித்து"

இக்குறளில் பசி எடுத்து பிறகு உண்க என்று வள்ளுவர் கூறுகின்றார். முன்பு உண்ட உணவு செரித்த பிறகு சாப்பிட

வேண்டும் என்ற உணர்வு மிகும்போது உண்ண வேண்டும் இவ்வாறு உண்ணாவிட்டால் நோய் உண்டாகும் என்கின்றார்

**மாறுபாடு இல்லாத உணவு**

உடலின் தேவைக்கு மாறுபாடு இல்லாத உணவையும் தவிர்க்க வேண்டிய காலத்தில் தவிர்த்து உடலின் தேவையின் அளவை அறிந்து உண்டால் உடலுக்கும், உயிர்க்கும் நோயில்லை

**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு."**

உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறு இல்லை என்பதாகும்.

**"இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும்**
**கழிபே ரிரையான்கண் நோய்"**

குறட்பாவின் பொருளில் குறைந்த அளவு உடலுக்கு ஏற்றது அறிந்து உண்பவன் எப்பொழுதும் இன்பம் நிலைக்கும்.

**உண்ணா நோன்பு**

பொதுவாக உணவால் வந்த துன்பம் போக்க உணவை மறுப்பதாலே தீரும்.உண்ணா நோன்பு இருந்தால் உடல் அடையும் பயன்கள் அதிகம் ஆகும். இயேசு, புத்தர், காந்தியடிகள் அனைவரும் இவற்றையே போற்றி வந்தனர்.உண்ணா நோன்பு உயிர் இயக்க உறுப்புகளை ஓய்வு பெற செய்கிறது.உடலின் செரிப்பு தன்மையை சீராக்கி நச்சு பொருட்களை வெளியேற்றி ரத்தத்தை தூய்மையாக்கி உயிரும் உடம்பும் புத்துணர்வு பெற செய்கிறது.

**"உள்ளம் பெருங்கோயில்**
**ஊனுடம்பு ஆலயம் "**

என்று திருமூலர் கூறுகின்றார்.உடலையும் உள்ளதையும் தூய்மையாக வைத்திருப்பது உணவு மறுப்பதால் மட்டும் வழியாகும்.உணவு வேளைதோறும் உண்பது கடமை என்று கொள்ளாமல் பசி ஏற்படுகின்ற அளவின்படி நான்கு மணிநேர இடைவெளியில் உண்ண வேண்டும்.

**நோய் நாடி**

நோய்க்கு மருத்துவம் செய்வதற்கு முன் நோய் இன்னது என்று அறிந்து கொண்டு செய்ய வேண்டும். இது நோய்

நாடி. அது தணிக்கும் வாய் நாடி என்பதற்கு நோய்க்கு மூலகாரணத்தை தீர்க்கும் வழியை நாடுவதாகும்.சித்த மருத்துவத்தில் நோய் தணிக்கும் வாய் ஆறு என்பர் அவை அறுத்தல்,சுடுதல், மருந்துண்ணல், உணவு,உண்ணா நோன்பு, உபாயம் என்பதாகும்.

மருத்துவர்களால் எல்லா நோயையும் தீர்க்க முடியாது என்று திருவள்ளுவர் வாய் நாடி என்றார்.சித்த மருத்துவத்தால் நோய் தணிக்கும் வழியை மருத்துவர்கள் கண்டறிந்து நோயினை நீக்க வேண்டும். மருத்துவர் என்பவர் பல்வேறு மருத்துவர்களை அறிந்திருப்பதுடன் நோயை குணமாக்க பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும் என்பது திருக்குறளின் உட்கருத்தாகும்.

**நோய் அளவு**

ஒரு மருத்துவர் மருத்துவம் சார்ந்த அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்து அது சார்ந்த பல்வேறு நூல்களையும் சிகிச்சை முறைகளையும் ஆராய்ந்து இருக்க வேண்டும். இதனை வள்ளுவர்

**"உற்றான் அளவும் பணிஅளவும் காலமும்**
**கற்றான் கருதி செயல் "**

அவன் சிகிச்சை தொடங்குவதற்கு முன் நோயுற்றவனின் வயது எவ்வளவு நாட்களாக இந்த நோய் உள்ளது என்பதையும் நன்கு ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும்.

**"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைசெய்யவானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து "**

ஒரு மருத்துவம் கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும். நோய் உற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன்,மருந்து உதவியினன், மருத்துவ முறை இவை நான்கும் பாகுபாடு உடையது. நோய் உற்றவனின் வயதும் மருத்துவம் செய்ய மிக முக்கியமானதாகும்.

உற்றான் அளவு என்பதற்கு, நோயுற்றவனின் உடல், வலிவு, மெலிவு, இளமை, முதுமை,நோய் தாங்கும் ஆற்றல்,மருந்தை ஏற்றுக்கொள்ளும் நிலை ஆகிய அளவுகள் என்று பொருள்படும். தீரும் நோய், தீராத நோய், சந்தேகத்திற்குரிய நோய் என்று நோயின் தன்மையை அறிதல் நோயின் அளவாகும்.

முடிவுரை

திருவள்ளுவர் காலத்திற்கு சென்று அவருடைய குறளுக்கு பொருள் காண்பதைவிட நம் காலத்திற்கு திருவள்ளுவரை திருக்குறளில் மெய்ப்பொருள் காண்பது சிறப்பு. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கு ஏற்ப மருந்து என்ற அதிகாரத்தில் உள்ள குறள்கள் விளக்குகின்றது. இதன் மூலம் உணவே மருந்து என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி பிணியை அகற்றும் வழிமுறைகளை நமக்கு கற்றுத்தருகின்றார். இதன் வழியே அளவோடு உண்டு வளமான வாழ்க்கையை அடைவோம்.



உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)


தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022**

**மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா**


**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50**

## உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**



**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | உடையார்கோயில் குணா |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ப.ஸ்ரீதேவி<br>முனைவர் பா.பத்மபிரியா<br>திருமதி ர.கண்ணகி<br>முனைவர் மா.கிருஷ்ணவேணி<br>பேரா. தி.தமிழ்ச்செல்வி<br>முனைவர் ந.சுமதி<br>செல்வி ந.காருண்யா |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# திருக்குறளும் திண்புவியும்

முனைவர் **அ. சர்மிளா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை,
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-02.

ஐம்பூதங்களாலான இவ்வுலகில் உயிர்கள் வாழ அடிப்படையானது முதற்பொருளான நிலமும் பொழுதும் என நுண்மான் நுழைப்புலம் கண்டவன் தொல்காப்பியன் ஆவார். இவ்வாறான அறிவுச் செழுமை நிறைந்த கருத்துக்களைக் கூறியத் தமிழ்ச் சான்றோர்களின் பட்டியலில் உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியப் பொதுமையான கருத்துக்களை "மறை' (வேதம்) எனக் கொள்ளும்படியாக எடுத்தியம்பி "உலகப்பொதுமறை' ஆனத் திருக்குறளில் பஞ்சப்பூதங்களில் முதன்மையான "நிலம்" எங்கெல்லாம் எப்பொருளில் வள்ளுவரால் சுட்டப் பெற்றுள்ளது என்பதை இயம்புவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**கடவுள் வாழ்த்து**

நூலின் துவக்கமாகியக் கடவுள் வாழ்த்து அதிகார முதல் குறளில் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமின்றி வடமொழி எழுத்துக்களுக்கும் "அ' எனும் அகரமே முதலாவது போல் இந்த புவிக்கும் அதிலுள்ள அனைத்து படைப்புகளுக்கும் ஆதிபகவன் முதலானவன்.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” (குறள். 1)

என வணங்கி, இத்தன்மையை இறைவன் பக்தாகளின் உள்ளமாகிய தாமரை மலரில் அவர்கள் நினைக்கும் வடிவில் தோன்றுபவனும் (குறள்.3) ஐம்பொறிகளின் ஐந்தவாவினை அடக்கியவன் (குறள்.6) அவன் பாதம் பணிந்தவர்களுக்குப் பூமியானது தனது எல்லா வளங்களையும் தந்து நீடு வாழ்விக்கும் என்று நிலம் மனிதனுக்குச் செய்யும் உபயங்கள் கூறப்படுகின்றன.

**வான்சிறப்பு**

விண்ணினின்று சிறு மழைத்துளியானது நிலத்தின் மீது படாவிடின் சிறுபுல் கூடத்தலை காண்பது அரிது (குறள்.16). இதனால் விரிந்த இவ்வுலகில் உள்ள உயிர்கள் பசித்துன்பத்திற்கு ஆட்பட்டு வருந்தும் (குறள்.13) என்று நிலமானது வானின்று வரும் நீரத்துளியினைப் பெற்றே தனது கொடுக்கும் பலனைத் தந்து உதவும் தன்மைத்து என்று வான்சிறப்பின் வழியாக வள்ளுவர் எடுத்தியம்புகின்றார்.

**நீத்தார் பெருமை, நிலையாமை**

உலகப் பற்றுகளிலிருந்து துறந்தவர்களது பெருமையினை எடுத்துக் கூற வந்த வள்ளுவர் இதற்கு அளவாக இவ்வையத்தில் (நிலம்) இறந்தாரின் எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளலாம் (குறள்.22) என, இறைவனின் செயல் அல்லது இயற்கையின் நியதி எனும் நிலையாமையைப் புவியின் மீது ஏற்றிக் கூறப்படுகின்றார். இதனையே,

“நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ் வுலகு” (குறள்.336)

என்ற குறளும் காலத்தின் வழி இப்பூமியின் இயல்பினைச் சுட்டிச் செல்கின்றது.

**பொறையுடைமை, புறங்கூறாமை**

தனக்கு வலி ஏற்படுத்தி தன்னை தோண்டுபவனையே தாங்கிப் பிடித்து நிற்கும் நிலம் தன்னை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளும் பண்பிற்கும் (குறள்.51) பிறர் நீங்கின. இடம் அல்லது காலம் பார்த்து புறம் கூறுபவனது உடலை நிலமானது.

இக்கொடுமைகளையும் பொறுத்துக் கொள்வதே தனக்கான அறமானது (குறள்.189) எனக் கருதிப் பொறுத்துக் கொண்டது எனத் தனக்கு முன்போ பின்போ இகழ்வாரைப் பொறுத்தல் என்ற நற்பண்பிற்கு நிலம் காட்டாக அமைகின்றது.

**புகழ்**

புகழில்லா வெற்று உடம்பைச் சுமக்கும் பழிப்பில்லாத நிலம் வளத்தைக் குறுக்கிப் பழிப்புக்கு ஆளாகும்.

"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்"

என்று தன்னைத் தாழ்த்தி மனிதனுக்குப் பாடம் புகட்டும் ஆசானாய் இப்பூமி திகழ்கின்றது.

**கூடாவொழுக்கம்**

விட்ட காமத்தை மீண்டும் நெருங்க விடாது காக்கும் உரனற்ற வஞ்ச மனத்தால் மறைந்து ஒழுகும் கூடா ஒழுக்கமுடையத் தவயோகியைக் கண்டு அவன் உடல் எனும் பஞ்சபூதங்களும் அகத்தே நகும் என்பதன் வழி தவயோகியின் தவ ஒழுக்கத்திற்கு நிலனும் வலு சேரக்கின்றது.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (குறள்.271)

**வெருவந்து செய்யாமை**

தனது குடை நிழல் கீழ் வாழும் குடிகளுக்கு அரசன் இரக்கம், அன்பு எனும் கண்ணோட்டம் காட்டுதலாலேயே இவ்வுலகு இயங்குகின்றது (குறள்.571). ஆனால் இதற்கு எதிராக இரக்கம் இல்லா மன்னனையும் (குறள்.572) கல்லாதாரைத் தனக்குத் துணையாகக் கொண்டு குடிகள் அஞ்சும்படியான செயல்களைச் செய்யும் அரசனையும்,

"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை" (குறள்.570)

மற்றும் கல்லாத கூட்டத்தாரைப் பாரத்து நிலம் நீங்கள் எனக்கு சுமை என்று இழித்துரைக்கின்றது.

**நாடு**

அரசனுக்கு அமைய வேண்டிய நாடானது நல்ல இயற்கை அரண்கள் (மலை, காடு), வற்றாத நாவளம், கேடில்லாத முயற்சிக்காமலேயே இயற்கையான குன்றா விளைநிலம்,

அளவற்ற பொருளுடைமையால் பிற நாட்டவரும் விரும்புவதாய், புதிய சுமைகள் ஏற்படினும் அவையையும் தாங்கும் வளம் கொண்டதாய், பசி பிணி அற்றதாய், கேடறியா ஒருவேளை கெட்ட இடத்தும் வளம் குற்றாதாய் இவ்வாறான நிறை கொண்ட நாட்டிற்கு எல்லாம் வாய்க்கும் நிலமும் வளையாத செங்கோண்மையும் அறத்தொடு ஒழுகும் குடிகளுமே ஆதாரமாவது. ஆயின் இன்றைய சூழலில் காட்டு மிருகங்கள் ஊருக்குள் புகுந்துவிடல், பருவ மழை தப்புதல், கொடிய வறட்சி, கொள்ளை நோய்கள், கோள்கள் திரிதல், இயற்கை அரண்கள் பாதிப்பு, மிகுதியான வரி விதிப்பு, பொருளாதார மந்தம் போன்ற பல காரணிகளுக்கும் அடிப்படை "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பதே ஆகும். இது எவ்வாறெனில் மொழியையும் மனிதனையும் பிரிக்க முடியாதது போல மன்னனின் செங்கோலாட்சியையும் இயற்கையையும் பிரிக்க முடியாது என்பதை,

"தள்ளா விளையும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு" (குறள்.731)

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்" (குறள்.742)

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்
இறையொருங்கு நேர்வது நாடு" (குறள்.733)

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு" (குறள்.739)

என்ற குறள்களின் வழி அரசன் நீதி வழுவாமல் முறை செய்தால் நிலம், நீர போன்ற எல்லா வளமும் வாய்க்கும் என்பதே இங்கு நோக்கத்தக்கதாகும்.

**சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை**

சான்றோர்களும் தம் சால்பு பண்பிலிருந்து விலகிக் குறைபடுமிடத்தும் (குறள்.990) இப்பண்பாளர்களைப் பொருந்தி வாழாத குறைபடுமிடத்தும் (குறள்.999) இப்பண்பாளர்களைப் பொருந்தி வாழாத உலகினோரையும் இப்பூவுலகம் தன் பாரத்தைத் தாங்காமல் புதைந்து அழித்துக் கொள்ளும் என்று சான்றாண்மைப் பண்பாளரைப் பொருந்தி வாழ்வதே உலகியல் அறம் என்பதனை புவி எனும் பூதத்தின் வழி முதன்மைப்படுத்துகின்றார் வள்ளுவர்.

"பண்புடையார் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (குறள்.996)

மேலும் சால்புடைய உயர்ந்தோர், அகன்ற இப்புவியையும், அதிலுள்ள செல்வத்தையும் கருதாது பழிபாவங்களுக்கு அஞ்சுதல் எனும் நாணத்தையே வேலியாகக் கொண்டு தம் மனத்தைப் பாதுகாத்து கொள்வர் எனக் கூறும் கருத்து முக்காலத்திற்கும் பொருந்தக் கூடியது. ஏனெனில் இந்நிலவுலகில் உள்ள செல்வங்கள் யாவும் அழியக்கூடியது. ஆனால் இம்மை, மறுமை இரண்டிலும் அழியாது வந்து ஒருவனைப் பாதுகாக்கக் கூடிய செல்வம் நல் அறங்களே ஆகும் என்பதை,

"நாண்வேலி கொள்ளாது மன்னோ வியஞ்ஞாலம்
பேணலர் மேலா யவர்" (குறள்.1016)

"இடமெல்லாம் கொள்நாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு" (குறள்.1064)

நிலமும் அதிலுள்ள யாவும் நிலையாமை உடையது என்று வலியுறுத்துகின்றது.

உழவு

நிலமும் பொழுதும் வாய்த்தாலும் அதனை நன்குப் பக்குவப்படுத்திப் பயன்கொள்ளல் எனும் உழவுத் தொழிலேயே உலக உயிர்களின் வாழ்வியல் அமைந்திருக்கின்றது. அதனாலே,

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்"

உழுவார் உலகத்தார்க்கு ஆணி"

எனக் கண்டுரைத்த வள்ளுவர் உழவு நிலத்திற்கும் உழவனுக்கும் உள்ள அன்பின் பிணைப்பை,

"செல்லான் கிழவன் இரும்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்" (குறள்.1039)

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்"
நிலமென்னும் நல்லாள் நகும்" (குறள்.1040)

நிலத்திற்குரியவன் நாளும் நிலத்திற்குச் சென்று செய்ய வேண்டியதைச் செய்யாது சோம்பி இருந்தால், நாள்தோறும் இல்லிற்கு வந்து தமக்குரிய கடமைகளை ஆற்றாத கணவனை

முதலில் மனத்தால் வெறுத்துப் பின் அவனோடு ஊடி மனைவியைப் போல நிலமும் முதலில் வாடிப் பிறகு தன் பலனைத் தராமல் போய்விடும் என்றும் நான் ஒன்றுமில்லாத வறியனாய் இருக்கிறேன் என்று சேம்பித்திருக்கும் ஒருவனைப் பார்த்து உழைத்தால் உயர்வை நல்கக் கூடிய நல்லாகிய நிலம் நகைப்பாள் என்று உரைப்பதன் வழி நன்கு உழைக்கும் ஆண்மகனுக்கு நல்ல பலனையும் சோம்பி இருப்பவனுக்கு நகைபை உண்டாக்கும் இழிவையும் தருவாள் நிலம் என்னும் நங்கை நல்லாள் என வள்ளுவர் எடுத்தியம்புவது மிகவும் அழகானது.

குறிப்பறிதல்

இதுகாறும் புறத்திற்கு உவமையாகவும் சான்றாகவும் துணையாகவும் திகழ்ந்த நிலம் இங்கு அகத்தில் தலைவியின் காதலை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தலைவனுக்கும் தக்கதோர் துணையாய் அமைந்து உதவுகின்றது.

"யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்" (குறள்.1094)

நான் பார்க்கும் போது குனிந்து நிலத்தைப் பார்ப்பதும் நான் பார்க்காத போது நிமிர்ந்து என்னைப் பார்த்துத் தனக்குள் மகிழ்ந்து புன்னகை புரிவதும் என் மீது கொண்டுள்ள காதலை அறிவிக்கும் குறிப்பல்லவா? ஏனத் தலைவியின் நாணம் காதலுக்கு உதவிடும் நல் தோழியாகவும் மேலும் அதே நாணம் தலைவனின் காதல் துணிவிற்கு ஒத்துழைக்கும் நல் பாங்கனாகவும் அமைந்து இருவரது காதல் பயிரை நன்கு செழித்து வளர்க்கும் களமாக நிலமென்னும் நல்லாள் வாய்த்தாள் என வள்ளுவர் வகையாய் மொழிவது படித்துச் சுவைக்கத்தக்கது.

ஊடலுவகை

ஒரு வகையாய்த் தலைவியின் காதலையும் பெற்று, புணர்ச்சியையும் பெற்று ஊடல் எனும் ஊழில் நிற்க, அதன் பின், தலைவன் பெரிதும் முயன்று தலைவியை ஊடல் தணிவித்த இன்பத்தை,

"புலத்தமிர் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து" (குறள்.1323)

"செம்புல பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே" (குறுந்.40)

நிலத்தோடு நீர் ஒன்றுபட்ட து போல் அன்பினால் ஒன்றுபட்டோரின் புலவி இன்பத்திற்குத் தேவலோக இன்பமும் சிறந்ததாகுமோ? இணையாகுமோ? என்று நிலத்தோடு நீர் இயைதல் வெப்பமும் தட்பமும் கூடியிருக்குமாறு போலவே இல்லறம் என்பதும் இன்பம் துன்பம் இரண்டும் கலந்திருப்பது. ஆகவே, இதனை உனர்ந்து இல்லறத்தை நல்லறமாக அமைத்துக் கொள்ளல் இல்லற தம்பதிகளுக்கு கடமையுமாம் என்பது நிலம் மற்றும் நீர் கொண்டு வள்ளுவர் நமக்கு உரைப்பதாகும்.

**தொகுப்புரை**

உயிர்களை வாழ்விப்பதற்கும், வாழ்விற்கான அறங்களான பொறுத்தல், தருதல், புகழ்படச் செயல்களைச் செய்தல், உழவு, செங்கோண்மை, அகவாழ்வு என்பனவற்றுக்கெல்லாம் நிலம் எனும் திண்புவியின் இயற்கைத் தன்மை முதற்பொருளாகவும் கருப்பொருளாகவும் உரிப்பொருளாகவும் தன்னையே தந்து மனிதனை வாழ்விக்கின்றது என்பது திண்ணம்.

இயற்கையைப் போற்றும்!!
இன்பம் பெருகுவோம்!!

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஶ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா



உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

# உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**



**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | **உடையார்கோயில் குணா** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **ப.ஸ்ரீதேவி**<br>முனைவர் **பா.பத்மபிரியா**<br>திருமதி **ர.கண்ணகி**<br>முனைவர் **மா.கிருஷ்ணவேணி**<br>பேரா. **தி.தமிழ்ச்செல்வி**<br>முனைவர் **ந.சுமதி**<br>செல்வி **ந.காருண்யா** |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# திருக்குறளில் ஒப்பனை

**க.பத்மாவதி**
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
தமிழாய்வுத்துறை
திருச்சிராப்பள்ளி

நாகரிகம் நன்கு வளர்ச்சியுறா காலத்தில் ஆதிகால மனிதன் இலை தழைகளை ஆடையாய் அணிந்து வலம் வந்த சான்றிலிருந்து ஒப்பனை என்பது பழந்தமிழ் சமூகத்திற்குப் புதிதன்று என்பதை அறியலாம். ஆயக் கலைகள் அறுபத்து நான்கனுள் ஒப்பனைக்கலையும் உள்ளடங்கும். இக்கட்டுரையானது திருக்குறளில் காணலாகும் ஒப்பனை பற்றிய செய்திகளை வள்ளுவரின் குறள் வழிநின்று ஆய்கிறது.

**ஒப்பனை**

ஆணும் பெண்ணும் தங்கள் உடலை அலங்கரிக்க அழகாகக் காட்சிப்படுத்த கையாளும் முறையை தும்பை என்பர்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''

என்ற நிலைமாறி இன்றைய காலக்கட்டத்தில் ஒப்பனை என்பது மிகவும் அவசியமான ஒன்றாகிவிட்டது.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்.
மஞ்சள் அழகும் ......... '' (நாலடியார் 131)

என்ற நாலடியாரின் பாடல் வரிகள் தலைமுடி அழகையும்

வளைவுள்ள ஆடையின் அழகையும் மஞ்சள் முகப்பூச்சு அழகையும் பற்றி எடுத்துரைக்கின்றது.

ஏடுகளில் வலம்வரும் இலக்கிய மாந்தர்களாயினும் தெருக்கூத்து முதல் திரைப்படம் வரை காட்சிக்குப் புலனாகும் கலைஞர்களாயினும் அவர்களை ஒப்பனையின்றி காண்பதரிது. அத்தகைய வகையில் வள்ளுவரும் ஒப்பனைக்கலையைப் பற்றி ஆங்காங்கே மெருகூட்டும் வண்ணம் எடுத்தோதியுள்ளார்.

**அஞ்சனமும் அக் சனக்கோலும்**

**"எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்''**

என்ற வழி ஒருவரை நோக்கியவிடத்து முதற்கண் படுவது சிரசும் அதில் உள்ள உறுப்புகளும் ஆம். அவ்வுறுப்புகளுள் மேலோங்கி நிற்பது கண். அக்கால பெண்டிர் முதல் இன்றைய நவ நாகரிக பெண்டிர் வரை கண்ணை அழகுபடுத்த தவறியதில்லை.

**"கண்ணுக்கு மையழகு"**

**"அல்லி விழியோரம் அஞ்சனத்தைத் தீட்டி"**

என்ற திரையிசைப்பாடல் வரிகளும் கண்ணின் மை அழகினைப் பற்றி பாடுகின்றன. சங்க இலக்கிய வரிகளும்

**"செறி இலைக்காய அஞ்சனம் மலர" (முல்லைப்பாட்டு 93)**

**"சிறு தொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்**

**..............................................................**

**பூப்போல் உண்கண் பொன் போர்த்தனவே"**

**(ஐங்குறுநூறு : 16)**

என்று கண்ணுக்கு அஞ்சனம் பூசிய அழகை எடுத்தோதுகின்றன.

ஒப்பனை செய்து கொள்ள விழைவோர் அதற்கான உபகரணங்களைப் பயன்படுத்துவர். அத்தகைய உபகரணங்களை நன்கு பயன்படுத்த அறிந்தவர்களால் தான் ஒப்பனையும் நேர்த்தி பெறும். திருக்குறள் தலைவி,

**"எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல் கொண்கன்**
**பழி காணேன் கண்ட இடத்து" (குறள் : 1285)**

என்றுரைக்கிறாள். இக்குறட்பாவில் பயின்று வரும் "சேரல்" என்றது மை தீட்டும் கோல். மை எழுதுங்கோல்

கண் அருகே செல்லச்செல்ல எப்படி அது எழுதப்படுபவர் கண்ணுக்குத் தெரிவதில்லையோ என்று பொருள் கொள்கின்றனர்.

ஆக, கண்ணுக்கு மைத்திட்ட அஞ்சனக் கோலைத் திருக்குறள் தலைவி பயன்படுத்தியிருக்கிறாள் என்பது கண்கூடு.

மேலும்

"கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. (குறள் : 1127)

என்ற குறட்பாவழி பெண்கள் தம் கண்களை அழகுபடுத்துவதற்கு மை தீட்டுவது வழக்கம். கண்ணில் மை தீட்டுவதற்கு முன் தலைவி ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கிறாள். அப்படி மை எழுதும் பொழுது ஒப்பனை நன்கு அமைவதற்காகக் கண்களை மூடிமூடித் திறக்க வேண்டியதிருக்கும். கண்ணை மூடும் பொழுது கண்ணினுள் தங்கி நிற்கும் தலைவன் மை எழுதும் நேரப் பொழுதில் தன் கண்ணிலிருந்து மறைந்து விடுவார் என்று அஞ்சுவதாக படைத்திருக்கிறார் வள்ளுவர்.

"மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்"

ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் பாடியுள்ளது ஈண்டு எடுத்தோதத்தக்கது.

மேலும்

"புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை" (குறள் : 1222)

என்ற வழி புன்கண்ணை என்றதற்கு ஒளியிழந்த கண்ணையுடையாய் என்பது நேர்பொருள். தலைவனை காணாது பிரிந்த துயரால் தலைவியின் கண்கள் ஒப்பனையின்றி ஒளியிழந்து காணப்படுவதாகக் சுட்டிச் செல்கிறார் வள்ளுவர்.

அக வாழ்வில் தலைவன் கொண்ட காதலைத் தனது கண்களால் அறிவது போலத் தலைவி அவன் மீதுள்ள காதலைத் தனது கண்களாலேயே அறிவிக்கின்றாள். அத்தகைய கண்ணை இன்ப மிகுதியின் கண் தலைவி ஒப்பனை செய்து அழகுபடுத்தியும் இன்பமில்லாதவிடத்து

கண் ஒப்பனையின்றி சோர்வுற வெளிப்படுத்தியும் உள்ளதை இலக்கியங்கள் பறைசாற்றி நிற்கின்றன.

**கொடும் புருவம் :**

கண் மட்டுமின்றி புருவத்தையும்

"கொடும் புருவம் கோடா மறைப்பின் ........ (குறள் : 1086)

என்றும் குறிப்பிட்டுள்ளார் . வள்ளுவர் கொடும் புருவம் என்றது வளைந்த புருவம் என்பதாம். வளைந்த புருவத்தையும் வளைந்த மாதிரியே தொடர்ந்து பராமரிக்க வேண்டும். கண்ணின் அழகை மேலும் மெருகூட்டுவது புருவம். இன்றைய இளம் தலைமுறை பெண்களில் ஏராளமானோர் Threading எனப்படும் புருவமுடி திருத்துதல் செய்வது கண்கூடு. இவ்வாறு புருவமுடி திருத்துவதால் விளையும் நன்மையை விட தீமைகள் அதிகம் என்கின்றனர் ஆய்வாளர்கள். ஆன்மிக வழியில் இரு புருவமத்தியில் இறைவனின் உள்ளார்ந்த ஆற்றலை அதிகம் உணரலாம். அவ்வாறிருக்க புருவத்தைச் சுற்றியுள்ள பகுதியைப் பாதுகாக்க வேண்டுமேயன்றி உரோமங்களைச் சிதைத்து ஆங்குள்ள வர்மபுள்ளிகளைச் செயலிழக்க வைத்தல் கூடாது. இதனால் நம் உடலில் பிராணசக்தி குறைபாடு ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது.

**கண்ணாடி**

ஒப்பனைக்கலைக்கு மிகவும் இன்றியமையாததாக வேண்டப்படுவது கண்ணாடி. இதன் மூலம் ஒப்பனையின் அழகை மேலும் மெருகேற்ற முடியும். சங்க காலத்திலிருந்து கண்ணாடியைப் பயன்படுத்தியதற்கான சான்று இலக்கியங்களில் தென்படுகிறது.

**"கையும் காலும் தூக்கத்தூக்கும்**
**ஆடிப்பாவை போல..............''**

என்று குறுந்தொகையில் ஆடிப்பாவை என்று கண்ணாடி இடம்பெற்றுள்ளது. திருக்குறளிலும்

**"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம் " (குறள் : 706)**

என்று குறிப்பறிதலை நன்கறிந்த வள்ளுவர் பளிங்கு என்று கண்ணாடியைக் குறிப்பிடுகிறார்.

இன்றைய காலக்கட்டத்தில் கையடக்க கண்ணாடி முதல் ஆளுயர கண்ணாடி வரை இல்லங்களிலும் அழகு நிலையங்களிலும் இருப்பதைக் காணலாம். இறைவனுக்கும் கண்ணாடி சேவை என்ற ஒரு வழிபாடுமுறை இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆய்வுக்கட்டுரையானது ஆண் பெண் என்ற பால் வேறுபாடின்றி மனித சமூகம் இருக்கும் வரை அழிவில்லாத ஒப்பனைக்கலையைப் பற்றி சில முடிபுகளைத் தருகிறது.

பெண்கள் தங்கள் கண்களுக்கு அஞ்சனத்தை அஞ்சனக்கோல் கொண்டு மகிழ்வான தருணத்தில் ஒப்பனை செய்ததையும் அவ்வாறு இல்லாத காலத்தில் கண்கள் ஒப்பனையின்றி ஒளியிழந்ததையும் எடுத்துரைக்கிறது.

வளர்ந்த மேலை நாடுகளில் ஒப்பனைக்கலைக்கு அதிகம் முக்கியத்துவம் தருகின்றனர். விலையுயர்ந்த முகப்பூச்சுத் திரவங்கள், உதட்டுச் சாயங்கள் என தரத்திலும் உயர்ந்தவையாக பயன்படுத்துகின்றனர். சங்க இலக்கிய காலக்கட்டத்திலிருந்து நாம் ஒப்பனைக்கு முக்கியத்துவம் அளித்திருந்தாலும் மேலை நாடுகளைப் போன்ற விழிப்புணர்வு இன்னும் இல்லை என்று சொல்லலாம்.

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு -2022**

**மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா**


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

# உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**



**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | **உடையார்கோயில் குணா** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **ப.ஸ்ரீதேவி**<br>முனைவர் **பா.பத்மபிரியா**<br>திருமதி **ர.கண்ணகி**<br>முனைவர் **மா.கிருஷ்ணவேணி**<br>பேரா. **தி.தமிழ்ச்செல்வி**<br>முனைவர் **ந.சுமதி**<br>செல்வி **ந.காருண்யா** |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறிகள்

**பா.ரம்யா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஸ்ரீமதிஇந்திரா காந்தி கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**முன்னுரை**

உலகப் பொதுமறையாம் திருக்குறள் மொழி, இனம், சாதி, சமயம், காலம் முதலிய வேறுபாடுகளின்றி உலக மக்கள் அனைவராலும் ஏற்றுப் போற்றத்தக்க அறநெறிகளைக் கூறும் நூலாகத் திகழ்கிறது.

"நன்றி மறப்பது நன்றன்று "'
"வறியார்க் கொன்று ஈவதே ஈகை "
"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்பவை மனித வாழ்வை உயர்த்தும் அருள் மொழிகள். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும் அதிகாரத்துக்குப் பத்து பாடல்கள் வீதம் 1330 குறள் வெண்பாக்களால் உடையது.

**திருவள்ளுவர்:**

திருக்குறளை இயற்றிய தெய்வப்புலவரான திருவள்ளுவர் மயிலாப்பூரில் ஆதிபகவன் என்போருக்குப் புதல்வனாகத்

தோன்றியவர். உலக மக்கள் அனைவரும் தங்களது வாழ்வில் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகளைத் தனது முப்பால் நூலில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். திருவள்ளுவர் பிறந்த இடமான மயிலாப்பூரில் வள்ளுவர் கோயில் கட்டப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவருக்கு ஒரு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் இவரது திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

**வாழ்வியல் நெறிகள் :**

ஒவ்வொரு மனிதனும் தான் இப்படி தான் வாழ வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை தன்னுள் வகுத்துக் கொண்டு வாழ்வது வாழ்வியல் நெறியாகும். வாழ்வியல் நெறிகள் என்பதற்கு ஆங்கிலத்தில் ஈ1பி/05 என்றழைப்பர். 81108 என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக தமிழில் அற நெறிகள், அறவியல், நன்னெறி கோட்பாடுகள், வாழ்வியல் ஒழுகலாறுகள், பண்புகள், ஒழுக்க முறைகள் முதலான சொற்கள் வழங்கி வருகின்றது. இவற்றுள் வாழ்வியல் நெறிகள் என்ற சொல்லே பெரிதும் வழக்கில் இருந்து வருகின்றன.

சமூகத்தில் முழுமையும், மகிழ்ச்சியும், அமைதியும் நிலவ வேண்டும் எனில் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் விதித்துக் கொள்ள வேண்டும். இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகள் வாழ்வியல் நெறிகள் எனப்படும். வாழ்வியல் நெறிகள்,

1. தனி மனித வாழ்வியல் நெறிகள்
2. சமூக வாழ்வியல் நெறிகள்

என இரண்டு வகைப்படும்

மனிதன், மனிதனாக வாழ்வதற்குத் தேவையான வாழ்வியல் நெறிகளைக் கூறும் நூலகத் திருக்குறள் விளங்குகிறது. மனித சமுதாயத்தின் வழிகாட்டியாகத் திகழும் திருக்குறளில் இடம் பெற்றுள்ள வாழ்வியல் அறங்களை எடுத்துக்காட்டும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**கல்வியின் சிறப்பு :**

கல்வி ஒருவரின் நிலையான, அழிவில்லாத செல்வம். "கல்வி இல்லா நிலம் களர் நிலம் அதில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை" என்கிறார் பாரதிதாசன்.

"பிச்சை புகினும் கற்கை நன்றே " எனக் கூறுவார் ஔவையார்." உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே " என புறநானூறு கூறும்."கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு " என மூதுரை கல்வியின் சிறப்பை எடுத்துக்கூறுகிறது.

உலகப் பொதுமறை நூலானது,

**"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை " ( குறள் 400)**

ஒரு மனிதன் தன் வாழ்வில் பெற வேண்டிய செல்வங்களில் முதன்மையான செல்வம் கல்வி எனக் குறிப்பிடுகிறது.

அறிவியல் கூறுகளாகிய எண்களும், கலையியல் கூறுகளாகிய எழுத்துக்களும் மக்களுக்கு இரண்டு கண்களாகும். இதனை

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு " (குறள் 392)**

என்று வள்ளுவரின் முப்பால் உணர்த்துகிறது.

கற்றுணர்ந்த பெருமக்களுக்கு அவர்கள் எங்கு சென்றாலும் அது தம் நாடு, எந்த ஊரும் தம்முடைய ஊராகும். கற்றோரின் சிறப்பு இவ்வாறிருக்க ஒருவர் சாகும்வரை கல்லாமல் இருப்பது எதற்கு? என திருக்குறள் வினவுகிறது.

**"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள் 397)**

என்ற குறள்வழி கற்றோரின் சிறப்பு நன்கு அறியப்படுகிறது.

மேலும் ,வள்ளுவம் கற்றோரின் சிறப்புகளைக் கூறும் நிலையில் கல்லாதாரின் நிலைமையையும் உணர்த்துகிறது.

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர் . (குறள் 410)**

ஐயறிவு விலங்குகளுக்கும் ஆறறிவு படைத்த மக்களுக்கும் உள்ள வேறுபாடு கல்லாதவருக்கும் அறிவு வளர்க்கும் நூல்களைக் கற்றவர்க்கும் உள்ளதாகும். கல்லாதவர் விலங்கு போன்றவர் எனக் கல்லாதாரின் கீழ் நிலைமையை நன்கு எடுத்துக் கூறுகிறது. கல்லாதவர் களர் நிலத்திற்குச் சமமானவர் என உத்திரவேதம் சுட்டுகிறது.

**"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களர்அனையர் கல்லா தவர் ( குறள் 406)**

அற வாழ்க்கை:

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிபட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாக உள்ளது.

மன மாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமை மனித வாழ்க்கை நெறியாகும் என்கிறது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள் 34)

என்னும் குறள் இதனை உணர்த்துகிறது.

வாய்மை:

திருக்குறள் அன்பு ,பண்பு ,,இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது. இவற்றைப் பின்பற்றுவோர் அடையும் பேற்றினையும், ஒதுக்கியவர் அடையும் அறிவினையும் திறம்படக் காட்டுகிறது." வாய்மை"என்பது தலையாய அறம் என்கிறது வள்ளுவம். அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று " (குறள்297)

என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

ஈதலறம் :

மனிதப் பண்பினை உயர்த்தும் நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் உயர்ந்தவனாகிறான். போட்டியும், பொறாமையும், அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும். ஈகைக் குணமே மனிதனை மாண்புடையவனாக்கும். வள்ளுவம் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்கிறது .இதனை,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள்231)

கொடுத்துப் புகழ் அடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் வழி அறியமுடிகிறது.

**கொல்லாமை:**

உயிர்க்கொலை தீது என்பது அனைத்து சமயங்களாலும் வலியுறுத்தப்பட்டதாகும். மக்கள் பின்பற்றக்கூடிய அனைத்து அறங்களில் முதன்மையானது எவ்வுயிரையும் கொல்லாமல் இருப்பது. அதற்கடுத்து அறமாவது பொய் கூறாமையாகும்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" (குறள் 323)

எனத் திருக்குறள் கூறுகிறது.

"ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் இன்னா" என்று இன்னா நாற்பதும் "கொல்லாமை முன் இனிது" என இனியவை நாற்பதும் குறிப்பிடுகின்றன.

தம் வாழ்நாள் முழுவதும் அருளுடைமையைப் போற்றிக் கொல்லாமைத் தொழிலுக்கு முதன்மை கொடுத்து வாழ்வோரின் வாழ்நாளைக் குறைக்கக் கூற்றுவனும் செல்ல மாட்டான் என்பதை,

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று" (குறள் 326)

என்னும் குறள் வலியுறுத்துகிறது.

திருக்குறள், கொல்லாமை என்னும் அறத்தைப் பேணிக் காப்பவன், இல்லறத்தை விட்டுத் துறவறத்தை ஏற்றுக் கொண்டவர்களை விட உயர்ந்தவன் என்கிறது.

"நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை" (குறள் 325)

என்பதன் வழி பிற உயிர்களைக் கொல்லாமல் வாழ்வோர் அடையும் உயர்ந்த நிலை உறுதிப்படுத்தப்படுகிறது.

**இனியவை கூறல்:**

மனிதனின் வாழ்நாள் சிறிது. அதில் சாதிக்க வேண்டியவை எண்ணற்றவை. கூடி வாழும் மனிதர்களுடன் நல்லுறவு இருந்தால் தான் வாழ்வில் சில நல்ல காரியங்களைச் சாதிக்க முடியும். நல்லுறவு கொள்ள நன்மொழி பேசத் தெரிந்து இருக்க வேண்டும், புறம் கூறக்கூடாது, பயனற்ற சொற்களைப் பேசக்கூடாது என்று வலியுறுத்தும் வள்ளுவம்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'' (குறள் 100)

என்கிறது .தீய சொற்களைக் கூறாதிருத்தல் இனியது என்று வள்ளுவம் எடுத்துரைக்கிறது.

**புறங்கூறாமை:**

மக்கள் செய்யத் தகாத செயல்களில் புறங்கூறுதல் ஒன்றாகும். ஒருவரைப் பற்றி அவர் இல்லாத போது புறம் கூறக் கூடாது என்று முப்பால் சுட்டுகிறது. அறம் என்ற சொல்லை வாயினால் சொல்லாதவனாக இருந்தாலும் ஒருவரைப் பற்றி அவர் இல்லாதபோது பேசாதிருத்தல் அதுவே சாலச் சிறந்தது என்பதை,

"அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது" (குறள் 181)

என்னும் குறள் எடுத்துக்காட்டுகிறது.

ஒருவன் இல்லாத போது பழித்து கூறி நேரில் காணும் பொழுது பொய்யாகச் சிரித்துப் நடிப்பது அறநெறியை அழித்துத் தீயவற்றைச் செய்வதை விடத் தீயதாகும் இதனை வள்ளுவம்,

"அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇ பொய்த்து நகை" (குறள் 182)

என்று புறங்கூறலின் தீமையை நன்கு விளக்குகிறது.

**நன்றி மறவாமை:**

நன்றி மறவாமை என்பது மனிதர்களிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகளுள் ஒன்று. இன்றைய காலகட்டத்தில் தனியான மனிதனிடம் மனிதநேயம் என்னும் அடிப்படை பண்பு இல்லாதபோது செய்நன்றி என்பதை அவன் எப்படி நினைத்துப் பார்க்க முடியும். ஆனாலும் உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி கடுகளவேயானலும் மறந்துவிடாமல் நன்றியுடன் இருக்க வேண்டும் என்ற வாழ்வியல் கோட்பாட்டைக் கீழ்க்கண்ட குறள் எடுத்துக்காட்டுகிறது.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன் தெரிவர்" (குறள் 104.)

ஒருவர் செய்த உதவியை மறப்பது அறம் அன்று . அவர் செய்த தீமையை அப்போதே மறந்து விடுவது அறமாகும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று" (குறள் 108)

என்று வள்ளுவம் இயம்புகிறது.

**பழிச் சொல்லிற்கு நாணுதல்:**

அக வாழ்வையும் ,புற வாழ்வையும் சிறப்பாக நடத்தி வெற்றி பெற இன்றியமையாத கூறாகக் கருதப்படுவது பழிக்கு நாணும் செயலாகும். சான்றோர் பழிக்கும் இழிந்த செயலைச் செய்யக் கூடாது என்பது நம் முன்னோர் கடைப்பிடித்த பண்பு. பழிச்சொல்லிற்கும், பழிச் செயலுக்கும் நாணுதல் என்பது வாழ்வின் உயரிய நெறியாகும் .தகாத செயலைச் செய்வதற்கு வெட்கப்படும் குணமே நாணமாகும்.

பிறருடைய பழியையும் , தம்முடைய பழியையும் சமமாகக் கருதி நாணும் தன்மை உடையவர் ,நாணம் என்று சொல்லப்படும் பண்புக்கே சிறந்த உறைவிடம் ஆனவர் என உலகில் உள்ள சான்றோரால் புகழப்படுவர்.

**"பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு" ( குறள் 1015)**

எனத் திருக்குறள் பழிச்சொல்லுக்கு நாணும் செயலைப் பற்றி எடுத்துக் கூறுகிறது.

**முடிவுரை**

மனித வாழ்க்கையின் தலைசிறந்த அறமாக விளங்கும் அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கையை வாழ வள்ளுவம் நன்கு வழி காட்டுகிறது. அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது. மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் நல்லறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.



உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)


தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022**

**மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா**


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

# உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**


**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

---


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | **உடையார்கோயில் குணா** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **ப.ஸ்ரீதேவி**<br>முனைவர் **பா.பத்மபிரியா**<br>திருமதி **ர.கண்ணகி**<br>முனைவர் **மா.கிருஷ்ணவேணி**<br>பேரா. **தி.தமிழ்ச்செல்வி**<br>முனைவர் **ந.சுமதி**<br>செல்வி **ந.காருண்யா** |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# வள்ளுவம் இயம்பும் நிலையாமை

முனைவர் **ம.தமிழ்ச்செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி, திருச்சி.2

**முன்னுரை:**

நிலையில்லாதவற்றை நிலையாகக் கருதும் சிந்தையைச் சித்தமாகக் கொண்டிலங்கும் மாந்தர்களுக்கு நினைவுப்படுத்தவே இவ்வதிகாரம் எழுதப்பட்டது. எனவே, வீண்நாளை எழுச்சி நாளாக மாற்றி வீறு கொள்ளச் செய்வதே நிலையாமைக் கருத்துகள் ஆகும். ஆகவேஇ மாந்தர்களின் மன உணர்வுகளின் மயக்கத்தை மதி நுட்பம் நிறைந்ததாக மாற்றம் செய்வதற்காக விளம்பப்பட்டதே நிலையாமை என்ற அதிகாரம் ஆகும்.

**வாழ்வியலை எடுத்தியம்பும் முறை:**

இத்தரணியில் வாழுவோர் பலருக்கும் எதார்த்தத்தை வெளிப்படுத்தி இருதயத்தின் உணர்வுகளையும் உள்ளக் கிடக்கைகளையும் தூண்டி உலகியலின் இருப்பு நிலையை உணர வைப்பதே நிலையாமை.எனவே உலக நாட்டத்தோடு மட்டும் வாழ்வதால் மறுமைக்கான வீடுபேறு கிட்டாது.

ஆகையினால் இல்லறத்தில் வாழ்ந்து அதன் மூலமாகவே பேரின்ப நிலையை எளிதில் அடையலாம் என்பது

திண்ணம். வந்த நிலை மறந்து வாழ்வதால் எவருக்கும் எந்தப் பயனும் கிடைப்பதில்லை. எனவே காலந்தோறும் அநேக இலக்கியத்தின் வழியாக நிலையாமையை வலியுறுத்தி வந்துள்ளார்கள் சான்றோர்கள்.

**இம்மையை மறுமையாக எண்ணுதல்:**

நிலையற்றவை என்று அறிந்த பின்னரும் உலகில் உள்ள பல்வேறு பொருட்கள் பதவிகள் மனிதர்கள் முதலானவற்றின் மீது மக்களின் தங்களின் நம்பிக்கையை வைத்து வாழ்ந்து வருகின்றனர். இதனால் கிடைப்பது அவர்களுக்கு வெறுமையும் ஏமாற்றமும் தானே ஒழிய வேறில்லை. ஆகையினால் இம்மனநிலை மாறினால் மட்டுமே நிலையானவற்றைப் பற்றிப் படிக்க இயலும். இதன் மூலமே பேரின்ப நிலையை அடைந்து வெல்ல முடியும். இந்நிகழ்வினை,

**"நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை".**

**திருக்குறள், நிலையாமை பா.எண் 331**

உலகில் உள்ளோர் நிலையானவற்றை அறிந்து தெரிந்து கொண்டால் ஞானத்தைக் கண்டடையலாம்.இதனால் முக்தி நிலையை எளிதில் அடைவதற்கு வாய்ப்பு அநேகம் இருக்கிறது.

அதேபோல கூத்தாட்டத்தைக் காணச் செல்கின்ற மக்கள் கூட்டம் சிறுகச் சிறுக ஒன்று சேர்ந்துப் பிறகுப் பெருங் கூட்டமாக மக்கள் பெருகி விடுவார்கள். இவ்வாறே கூத்தாட்டம் முடிந்த பின்பு மக்கள் கலைந்து செல்வமுங் கூட செல்வது போலவே செல்வமும் நாட்செல்லச் செல்ல ஒரு நிமிடம் நீங்கிவிடும் உன்ற கருத்தினை வலியுறுத்தும் விதமாக

**"கூத்தாட் டவைக்கழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கு மதுவிளிந் தற்று".**

**திருக்குறள், நிலையாமை, பா.எண் 332**

ஆகவே, செல்வம் இருக்கின்ற பொழுதே பிறருக்குத் தான தருமக் காரியங்களைச் செய்திட வேண்டும். நீர்க்குமிழி போன்ற வாழ்வைப் பயன்படுத்தி நன்மையின் பால் அதிகம் நாட்டம் கொண்டிடல் வாழ்க்கைக்கு துணை புரியும். அதனால் மட்டுமே நாம் பிறந்ததின் பயனை அடைய இயலும்.

**புண்ணியம் மகிழ்விக்கும் செல்வம்:-**

பணம் ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் தன்மையற்றது. எனவே 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்கிற பழமொழிக்கேற்ப ஒருவரிடம் செல்வம் தங்கியுள்ள போதேதான் அவரிடத்தில் செல்வம் அற்ற வேளையிலும் அச்செல்வத்தினால் வரக்கூடிய புண்ணியமும் பயனையும் அதிக நன்மையை அவருக்குப் பெற்றுத்தரும்.

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்".

திருக்குறள், நிலையாமை, பா.எண 333

மாந்தர் பலர் இவ்வுலகில் நிலையானது என்று எண்ணுகிற செல்வமும் இளமையும் இவைகளுள் எப்போதுமே நிலையற்றதாகும் இதனைச் சிந்தையில் பதித்தால் சிரமங்கள் சிக்கல்கள் யாவும் நீங்கி இன்பத்தின் பயனைத் துய்க்க இயலும்

**நாட்களும் நாழிகையுமே கடந்திடும்:**

பூவும் புல்லும் எவ்வாறு அந்தந்த நாழிகையில் தன்னுடைய ஜீவனை இழந்து விடுமோ அவ்வாறே மனிதனின் உயிரும் உடலை விட்டு விரைவாக நீங்கிவிடும். நாட்கள் கடக்க கடக்க இளமை செல்கிறது என்கிற உணர்வற்றவர்களாக மனிதர்கள் வாழத் தொடங்குகின்றனர். ஆனால் அதற்குள் அவர்களை மரணம் சுதந்தரித்துக் கொள்கிறது இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக வள்ளுவம் இவ்வாறு இயம்புகிறது.

"நாளென ஒன்றுபொற் காட்டி உயிரீரும்
வுளீள துணர்வார்ப் பெறின்".

திருக்குறள், நிலையாமைஇ பா.எண 334

ஒரு மனிதனுக்கு ஒரு நாள் வந்து போனவுடன் அவனுடைய உயிர் ஓரளவு தேய்ந்து விடுகிறதுஇ எனவே மரணத்திற்கு முன்பாக ஒவ்வொருவரும் அவர்களுடைய உள்ளான மனிதனில் இருக்கின்ற குணாதிசயங்களை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்ளுதலே சிறந்த அறமாகக் கருதப்படுகிறது. இதனால் நமக்குள் இருக்கும் அகத்தை ஆற்றிப் பிறருக்கு சேவை செய்யும் உள்ளம் பெற்று உயர வாய்ப்பிருக்கிறது.

மேலும் நிச்சயமற்ற உலகில் மனிதர்கள் எண்ணுகிற எண்ணங்கள் யாவும் எண்ணிலடங்காத வருடங்கள் வாழ்கின்ற போக்கை உடையதாக இருக்கிறது அது மட்டுமின்றி அடுத்த கணம் உயிரோடு இருக்க கூடுமா என்பது வினாக்குறியாக உள்ளதே வாழ்க்கைஇ இதனையே திருமூலர் 'காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்தப் பொய்யடா' என்ற கருத்தினை வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு வள்ளுவம் விளம்புகிறது .

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல".

திருக்குறள், நிலையாமை, பா.எண 337

அதாவது உயிருக்கும் உடலுக்கும் இடையே இருக்கின்ற அந்தக்காலம் தான் நமது வாழ்க்கை என்பதை உள்ளங்கையளவு நெல்லிக்கனியாக உணர்த்தியிருக்கிறார் குறளடி நாயகன்.

**உடலினை விட்டகலும் உயிர்:**

பொதுவாக இம்மையில் மனித உயிருக்கும் உடலுக்கும் எவ்விதத் தொடர்புமற்ற மயக்கமான மாயை நிலையே ஆகும். எனவே நாம் வாழுங் காலத்தில்உடலோடு உயிர்ப் பிணைக்கப்பட்டு உயிர்த்திருக்கிறோம். அதோடு மட்டுமின்றி உள்ளான மனிதன் புறம்பான மனிதன் என்று இரு வகையான மனித நிலைகள் காணப்படுகின்றன.ஆகையினால் இந்தப் புறம்பான மனிதனுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை நாம் உள்ளான மனிதன் ஓங்கி உயருத் தேவையான அனைத்து வகையான அன்பின் குணாதிசயங்களான அன்பு சாந்தம் பணிவு கீழ்ப்படிதல் இணங்குதல் சகிப்புத்தன்மை முதலான குணங்களைப் பெற்றுக்கொள்ளுதலே யாவருக்கும் தேவையானதாகும்.

கருப்பையில் உயிர் உள்ளே இருக்கும்போது கரு முட்டையும் அதிலுள்ள உயிரும் பிணைந்திருக்கும்.ஆனால் உயிர் இப்பூமியை வந்தடைந்த பின்னோ தொடர்பற்ற நிலையில் தென்படும்.இதனை தெளிவுறுத்தும் விதமாக வள்ளுவம் இப்படி இயம்புகிறது

"குடம்பைத் தனித்தொழியப் புட்பறந் தற்றெ
யுடம்பொ டுயிரிடை நட்பு".

திருக்குறள், நிலையாமை, பா.எண்.338

அதுபோலவே உடலோடு உயிர் ஒட்டியிருக்கும்போது செய்கின்ற பாவப் புண்ணியங்கள் தான தர்மங்கள் யாவும் உடல் அழிந்தப் பின்னும் உயிரை நிலைக்கச் செய்ய உதவுகிறது என்பதை இத்திருக்குறள் உணர்த்துகிறது.

உயிரான ஒவ்வொரு உடலுக்குள்ளும் ஓடிப் பிறகு வெளிவந்து மீண்டும் பிறிதொரு உடலை நாடிச் செல்கிறது. எனவே விலைமதிப்பற்ற உயிரானது தனது நிலையான இருப்பிடத்திற்காகத் தேடுதல் பணியில் நாடோறும் ஈடுபட்டு வருகிறது. அதுமட்டுமன்றி உயிர் உறங்கும் நேரமானதுதற்காலிக மரணம் அல்லது உறங்குதல் நிலையாகும். நம்முடைய மூச்சுக்காற்றானது நம் உடலை விட்டகன்று வெளியே சென்னு பின் நம் உடலுக்கே வந்தால்தான் நாம் உயிரோடே இயங்க முடியும் .அதனை அனைவரும் கருத்தில் நிறுத்தி உயிருக்குச் சுகந்தம் அளிக்கும் வகையில் இயக்கத்தைக் கைக்கொள்ளுதல் அவசியமாகும். இதனை,

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு".

திருக்குறள்.நிலையாமை, பா.எண்.339

இப்படியாக ஒவ்வொரு மனிதனுக்கும் உறக்கம் என்பது சாவாகக் கருதப்படுகிறது. உறக்கத்திலிருந்து விடுபடுவதையே பிறப்புநிலையாகும். ஆகவே தான் சான்றோர்கள் உயிரை நீர்க் குமிழியோடும் கானல் நீரோடும் ஒப்பிடுவார்கள். தொடர்ந்து மனிதர்கள் ஒவ்வொருவரும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் மனத்திலிட்டு இன்னலோடு வாழ்ந்து நிகழ்காலத்தின் செயல்பாடுகளில் கவனஞ் செலுத்தத் தவறுகின்றனர்.

ஆகையிகால் தொடர்ந்து இந்நிலையே அவர்களுடைய வாழ்வியலாக மாறிவிடுகிறது. இதனால் மனிதர்களுக்கு அதிக வத்தமும் மனச் சஞ்சலமுமே மிகுகிறது.

தற்காலிக வாழ்வில்நிரந்தரத்தைத் தேடி அலையும் உயிர்ப் பற்றையும் உடல் அழிவுக்குப் பின் நிகழும் நிலையையும் அறிந்துகொள்ள அதிக வாய்ப்பிருக்கிறது. இந்நிகழ்வினைச் சுட்டிக் காட்டும் விதமாக

"புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு".

திருக்குறள். நிலையாமை, பா.எண்.340

உயிரானது ஒவ்வொரு உடலாகிய வீட்டிற்குள்ளும் தேடி அலைந்துத் தனக்கான நிரந்தர

வீட்டினை அடைய முயற்சி செய்கிறது. ஆனால், அதனால் நிலையான வீட்டை எப்போதும் அடைய முடியாமல் போகிறது என்று வள்ளுவம் பகர்கிறது.

**நிறைவுரை:**

நிலையாமை என்பது பொருளற்ற உலகில் உள்ளனவற்றைப் பொருளாக எண்ணுகின்ற பக்குவமற்ற நிலையைப் பக்குவமாக்க உதவுகின்ற சிறந்தப் பெக்கிஷமாகும்.

வண்டிச் சக்கரம் போலே வாழ்க்கையானது மாறிக் கொண்டேயிருக்கும். ஆகையினால் உயிர் உள்ளபோதே அறத்தின்பால் செல்வத்தின் பயனைத் துய்க்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

செல்வத்தைப் போல இளமையும் அழகும் நிலையில்லாதது என்பதை மன்பதைக்குத் தெளிவுறுத்துகிறது.

இவ்வுலகில் உடலும் நிலையற்றது ஆகும். அவ்வாறே சிறுகச்சிறுக இளமையும் தேய்நது மரணம் நம்மை ஆண்டு கொண்டுவிடும் என்பதை அறிவுக்குப் புகட்டவே வள்ளுவர் இவ்வதிகாரத்ததை இயற்றியுள்ளார் எனில் அது மிகையாகாது.

சிருஷ்டித்த இறைவனை மறந்து மாய உலக வாழ்வில் மயங்கித் திரியாமல் சிருஷ்டிகரைக் கண்டுணர்தலே வாழ்வின் உச்சப்பட்ச புரிதலாகும். இதனை வலியுறுத்துகின் விதத்தில் முத்துகளான கருத்துகளை உள்ளத்திற்குள் விதைத்துள்ளார் வள்ளுவனார்.

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.ஸ்ரீதேவி

முனைவர் பா.பத்மபிரியா

திருமதி ர.கண்ணகி

முனைவர் மா.கிருஷ்ணவேணி

பேரா. தி.தமிழ்ச்செல்வி

முனைவர் ந.சுமதி

செல்வி ந.காருண்யா



உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு -2022

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)



தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**

**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

---

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | **உடையார்கோயில் குணா** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **ப.ஸ்ரீதேவி**<br>முனைவர் **பா.பத்மபிரியா**<br>திருமதி **ர.கண்ணகி**<br>முனைவர் **மா.கிருஷ்ணவேணி**<br>பேரா. **தி.தமிழ்ச்செல்வி**<br>முனைவர் **ந.சுமதி**<br>செல்வி **ந.காருண்யா** |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# திருக்குறள் உணர்த்தும் சிந்தனைக் கோட்பாடுகள்

முனைவர் **த. பிரேமா**
உதவிப்பேராசிரியர்.
தமிழாய்வுத்துறை.
ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**முன்னுரை.**

திருவள்ளுவர் மனிதனை மனிதனாக வாழ வைக்கக் கூடிய கருத்துக்களை, 1330 குறள் முத்துக்களாக,133 அதிகாரங்களில் வகுத்துள்ளது மிக, மிக இன்றியமையாததாகக் கருத்தப்படுகிறது. சமுதாயத்தில் வாழும் மனித இனத்திற்குத் தேவையான கருத்துக்களை ஆழமாகவும், அழுத்தமாகவும் வடித்துள்ளார். எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் வள்ளுவர் சிந்தித்து கூறியது இவ்வுலகிற்கு கிடைத்த மாபெரும் சொத்து. வள்ளுவர் சுட்டும் குணநலன்களாக அருளுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, இனியவை கூறல், ஈகை, ஒழுக்கமுடைமை, பண்புடைமை, புறங்கூறாமை, போன்றவற்றை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது. இதான் மூலம் திருக்குறளின் பெருமையை உணர முடிகிறது.

### புறங்கூறுதல்

வள்ளுவர் வாழ்வியலுக்கு உகந்த நன்மைகளை கூறியது போல தீயவைகளை எடுத்துரைக்க தவறவில்லை. பிறர் மேல் கொள்ளும் பொறாமை என்கிற தாழ்வு மனப்பான்மையே புறங்கூறலாக வெளிப்படுகிறது. வள்ளுவர் புறங்கூறலை மறைமுகமாக சுட்டிக்காட்டாமல் நேரடியாகவே குறிப்பிடுகின்றார். ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பற்றிப் பிறரிடம் தாழ்த்தியும் பழித்தும் பேசுவதே புறங் கூறுதலாகும். புறங்கூறல் என்ற சொல்லிற்கு நான்மணிக்கடிகை 'வடுச்சொல்' என்று குறிப்பிடுகின்றது. வள்ளுவரும் இழிவாகக் கூறல், குற்றம் கூறல், குறை கூறல், தூற்றிப் பேசுதல், பழித்துப் பேசுதல்,போன்ற பல சொற்களால் புறங் கூறுதலைக் குறிப்பிட்டுள்ளார்.

### புறங்கூறுபவரின் குணங்கள்

புறங்கூறல் என்ற பாவச்செயல் பொறாமை,கோபம், தான் குற்றத்தை நினைக்காமல் இருத்தல், பிறரைக் குறைப்பட நினைத்தல் போன்ற குணங்களில் உண்டாகிறது. அதனால் தான் வள்ளுவர் அறம் செய்யவிட்டாலும் ஒன்றும் இல்லை. ஆனால் பிறரை பழித்துக் கூறும் குறையைத் தவிர், அது வாழ்வை அழித்து விடும் என்பதை திருக்குறள் மூலம் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

அதுபோல, "ஒருவனை நேரில் காணும்போது அவனுடைய நற்குணங்களைச் சொல்லி பாராட்டி அவனுக்குப் பின்னால் பொறாமையின் காரணமாக அவனுடைய தீய குணங் களைக் கூறி பழித்தூற்றுதல் புறங் றுதலாகும்.'' என்று சு.ந. சொக்கலிங்கம் குறிப்பிடுகின்றார்.

வள்ளுவர் புறங்கூறல் பொய்பேசுவதன் காரணமாக எழுகின்றது. அதாவது ஒருவரை கண்ட இடத்தில் ஒன்றும், காணாத இடத்தில் மற்றொன்றுமாக பொய் பேசித் திரித்துக் கூறும் பொய்யானவர்கள் இவ்வுலகில் வாழ்வதைக்காட்டிலும் இறப்பதே மேல் என்பதை,

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல் (குறள் - 183)
அறங்கூறும் ஆக்கம் தரும்

குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது.

ஒருவன் புறங்கூறும் அற்பத் தன்மையால் அற நூல் கூறும் நல்ல உள்ளம் இல்லாதவன் என்று,

அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும் (குறள் - 185)

என முப்பாலர் கூறுவது சிந்திக்கக்கூடியது.

"புறம் சொல்லித் திரிவரோடு இணங்க வேண்டாம்" என உலக நீதி (9) கூறுவதும், "முன்னை உரையார் புறமொழிக் கூற்று இன்னா" என இன்னா நாற்பது (32) கூறுவதும், ஒருவருடைய குற்றங்களை அவர் இல்லாத இடத்தில் பழித்துக் கூறுவது புறங்கூறுதல் என்னும் மிகப்பெரிய குற்றமாகும்.

ஒருவர் அறநூல்களில் கண்ட சிறந்த செயல்களை மொழியாவிடினும் புறம்கூறும் கொடிய செயலைத் தவிர்ப்பது மிகச்சிறப்பானதாகும். பிறருடைய குற்றத்தைப் போல தம் குற்றத்தையும் புரிந்து கொண்டு புறம் கூறும் செயலை விட்டொ ழித்தால் வாழும் உயிர்க்கு தீமை உண்டாகுமோ? என வினவுகிறார். என்பதை,

ஏதிலார் குற்றாம்போல் தன் குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மண்ணும் உயிர்க்கு (குறள் - 190)

என்ற குறள் தெளிவாக விளக்குகிறது.

**சான்றோர்களின் பண்புநலன்கள்**

சால்பு என்று கூறப்படுவது கல்வி கற்றறிந்த பெருமக்களின் உயர்ந்த குணநலன்களைக் கொண்டு மனித இனத்திற்கு நற் தொண்டு புரியும் செயல் ஆகும். நல்ல தொண்டுகள் என்பது பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதல், பிறர் செய்யும் தவற்றைப் பொறுத்துக் கொள்ளுதல், தோல்வியை துணை கொள்ளமை, பழிக்கு அஞ்சி நடக்கும் செயல், சுயநலம் தவிர்த்தல், தீமையற்ற சொற்களை கூறுதல், நேயம் காத்தல், இவைகளைக் கடைப் பிடித்து வாழ்பவர்களைச் சான்றோர் எனக் கூறி மகிழ்ந்தனர் நம் முன்னோர்கள்.

எக்காலத்திலும் எல்லா மக்களிடமும் பணிவு என்ற அணிகலனை அணிந்து சான்றோர்கள் செயல்படுவது அவர்க்கு அழகாகும். என்பதை,

'என்றும் வணங்கல் அணிகலம் சன்றோர்க்கு' நாண் மணிக்கடிகை (88) எடுத்துறைக்கிறது.

அறிவிற் சிறந்த சான்றோர் தமக்குத் தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் சால்பினால் பயன் இல்லை.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (குறள் - 987)

என்று வள்ளுவப் பெருந் தகைக் கூறுகிறார்.

உயர்குடிப் பிறந்த பண்புடையோர் தெளிவாக அறியப்பட்ட பகைவர்கள் அடையும் துன்பத்தினை நோக்கினால் தமக்கு பிழைகள் செய்தவராக இருந்தாலும் மீண்டும் அவரிடம் அன்பு செய்து, அவருடைய துன்பத்தை நீக்க முயலுவர். இதை,

'தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் நோடுவர் மேன்மக்கள்'

என்கிறது பழமொழி நானூறு (87).

ஒருவன் செய்ய வேண்டிய உதவியைச் செய்ய இயலாத நிலையில் இருப்பது ஒப்புரவுப் பண்புடையவர்க்கு வறுமை நிலையாகும். என்பதை,

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. (குறள் - 219)

எனப் பெருநாவலர் கூறுவது ஒப்புரவாளரின் உண்மை நிலையை உணர்த்துகிறது.

ஆதரவு அற்ற எளியோர்க்கு உண்ண உணவு உடுக்க உடை தங்குவதற்கு இடம் யாவும் கொடுத்து உதவும் இயல்பினர் யாவராலும் அறிஞர் பெருமக்கள் எனப் புகழப்படுவர்.

"அற்றார்கட்கு உண்டி உரையுள் உடுக்கை இவை
எந்தர் பண்டிதராய் வாழ்வார் பயின்று"

என ஏலாதி பாடல் (9) விளக்கிக் கூறுகிறது.

அதுபோல, சாவை விடக் கொடியது ஒருவற்கு வேறு ஒன்றும் இல்லை. உயிர் வாழ இயலாமல் துன்புறும் வரியோர்க்கு பொருள் கொடுத்து உதவாவிடில் அந்தக் கொடிய சாவும் இனிதாகி விடும். என்பதனை,

சாதலின் இன்னாத தில்லை இனிததூவஉம்
ஈதல் இயையாக் கடை. (குறள் - 230 )

என உலகப் பொதுமறையில் தெய்வப்புலவர் கூறுவது சிறப்புடையது.

**மன்னிக்கும் குணம்**

மனத்துயரை ஆற்ற வழிகளைக் கூறும் வள்ளுவரின் வழி உளவியல் போக்கில் அமைந்துள்ளது. ஒருவர் செய்யும் தீமையை மறத்தல், பொறுத்துக் கொள்ளுதல் (பொறையு டைமை) மன்னித்தல், இன்ன செய்தவர்க்கு நன்மையே செய்யும் மிக உயர்ந்த பக்குவநிலை இவற்றையே திரும்பத்திரும்ப வழியுறுத் துகிறார்.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. (குறள் - 152)

மனத்தில் பிறர் செய்த தீமையை மறக்கவும் வழி கூறுகிறார் வள்ளுவர்.

கொன்றன்ன இன்னா செய்யினும் அவர்செய்த
ஒன்று நன்றுள்ளக் கெடும். (குறள் - 109)

மனத்தில் நல்ல எண்ணங்களே நிலைக்க வேண்டும். நல்லனவற்றயே சிந்திக்க வேண்டும்.

**மனிதநேயப் பண்பு**

நேயம் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். மனிதநேயம் என்பது மனிதர்கள் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு. மனிதப் பண்பான இரக்க உணர்வு மற்ற உயிர்களிடத்துக் காட்டும் மனிதநேயம் எல்லாப்பண் புகளிலும் சிறந்தாகப் போற்றப்படுகிறது. மனிதநேயத்தினைப் பல இடங்களில் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். மக்களைப் பற்றி எழும் இலக்கியங்கள் அனைத்திலும் மக்கட்பண்பு பேசப்படுவதை அறியலாம்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. (குறள் 103 )

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலை விடப் பெரியதாகும். என்று வள்ளுவர் கூறுவதை அறிய முடிகிறது.

ஒரு மதம் கூறிய சில கருத்துக்களை பிற மதங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதில்லை. ஆயினும் அனைத்து மதங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்களில் ஒன்றுதான் அருளுடைமை என்னும் மனிதநேயம்.

உன் உயிரைப் போல் பிற உயிரையும் நேசி என்ற மனிதநேயக் கருத்தை அனைத்து சமயங்களும் கூறுகிறது. இதனையே வள்ளுவர்,

நல்லா ட்டால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை.

என்று குறிப்பிடுகின்றார்.

வறியோர்க்குப் பொருள் கொடுத்து உதவுதல் பொருள் படைத்தோர்க்கு இனிது.

"பொருளின் தொகை இனிது தொட்டு வழங்கின்" என நாண்மணிக்கடிகை (36) தெளிவாக விளக்குகிறது. இவ்வாறு மனிதநேயம் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வேரூன்ற வேண்டும் என்பதை சுட்டிக்கட்டியுள்ளார்.

முடிவுரை

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் புறங்கூறுபவர்களை இனம் கண்டு, அவர்களுக்கு புறப்பேச்சால் அன்பு, இரக்கம், பாசம், இன்சொல் போன்ற நல்ல பண்புகள் சிதைந்து விடுகிறது என்பதை எடுத்துக் கூற வேண்டும். வள்ளுவப் பெருந்தகை வாழ்வியலை நாசமாக்கும் புறம்பேசித் திரியும் நபர்களைக் கடுமையாக கண்டிக்கிறார். இது வாழ்க்கைக்கு வேண்டாத பண்பாகவும் சுட்டிக்கட்டியுள்ளார். மனிதனை விலங்கினின்று பிரித்து, சிந்திக்கும் ஆற்றலால் சிறப்படையச் செய்வது மனமே. வையத்துள் வாழ்வாங்கு வாழும் மனிதன் இவ்வுலகிலேயே தேவர்க்கு ஒப்பாக மதிக்கப்படுவான். மனிதன் தான் வாழ்வில் கடந்து வருகின்ற நாட்களில் அவர் ஆற்ற வேண்டிய கடமைகளை , அற ஒழுக்கத்தை வள்ளுவர் காட்டும் பங்கு உளவியல் நோக்கில் சிந்திக்க வைக்கிறது.

உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)



தொகுப்பாசிரியர்
உடையார்கோயில் குணா

பதிப்பாசிரியர்கள்
முனைவர் ப.ஸ்ரீதேவி
முனைவர் பா.பத்மபிரியா
திருமதி ர.கண்ணகி
முனைவர் மா.கிருஷ்ணவேணி
பேரா. தி.தமிழ்ச்செல்வி
முனைவர் ந.சுமதி
செல்வி ந.காருண்யா

உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு - 2022
மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 50

## உலகப் பொதுமறை

# வள்ளுவமும் வாழ்வியலும்

(ஆய்வுக் கட்டுரைகள்)




தொகுப்பாசிரியர் :

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் **ப.ஸ்ரீதேவி**

முனைவர் **பா.பத்மபிரியா**

திருமதி **ர.கண்ணகி**

முனைவர் **மா.கிருஷ்ணவேணி**

பேரா. **தி.தமிழ்ச்செல்வி**

முனைவர் **ந.சுமதி**

செல்வி **ந.காருண்யா**



**உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022**

மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகா

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-50**

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை<br>வள்ளுவமும் வாழ்வியலும்<br>(ஆய்வுக் கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | : | உடையார்கோயில் குணா |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ப.ஸ்ரீதேவி<br>முனைவர் பா.பத்மபிரியா<br>திருமதி ர.கண்ணகி<br>முனைவர் மா.கிருஷ்ணவேணி<br>பேரா. தி.தமிழ்ச்செல்வி<br>முனைவர் ந.சுமதி<br>செல்வி ந.காருண்யா |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2022 |
| உரிமை-வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன்கோயில்,<br>தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு<br>கைப்பேசி : 0091 75 3000 2454<br>0091 94 4393 8797<br>மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com |
| அளவு | : | டெம்மி 1 X 8 |
| பக்கங்கள் | : | XIV + 274 |
| விலை | : | ரூ.350/- |
| ISBN | : | 978-81-909877-8-3 |
| நூல் வடிவமைப்பு | : | தங்கம் வரைகலையகம், சென்னை-35 |
| அச்சாக்கம் | : | மாணவர் நகலகம், சென்னை-01 |

# வள்ளுவத்தில் சுற்றுச்சூழல்

**அ.இராதா**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
திருச்சி-2

உலகப் பொதுமறையான திருக்குறள் இரண்டு அடிகளைக் கொண்ட குறள் வெண்பா என்னும் பா வகையைச் சார்ந்தது. 1330 குறட் பாக்களால் ஆனது. மொழி,இனம்,மதம்,சாதி,சமயம் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் பொருந்தக்கூடியது. திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சிறப்பினைக் கொண்டது. முப்பால்,உத்தரவேதம்,தெய்வநூல்,பொய்யா மொழி,வாயுறை வாழ்த்து,தமிழ்மறை எனப் பல பெயர்களால் வழங்கப்படுகிறது. திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று. அது ஒரு வாழ்வியல் நூல். இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழி காட்டும் புரட்சி நூல்.

சுற்றுச்சூழல் அல்லது உயிரியற்பியல் சூழல் என்பது ஒரு உயிரினத்தை அல்லது மக்கள் தொகையைச் சுற்றியுள்ள உயிர் உள்ள மற்றும் உயிரற்ற கூறுகள் அனைத்தையும் அவற்றின் விளைவாக குறிப்பிட்ட உயிரினம் அல்லது மக்கள் தொகையின் பிழைப்புத்திறன்,விருத்தி,படிவளர்ச்சி அல்லது கூர்ப்பு ஆகியவற்றில் தாக்கம் செய்யக் கூடிய அனைத்துக் காரணிகளையும் உள்ளடக்கிய இயற்கைச்

சூழலைக் குறிக்கின்றது. சுருங்கக் கூறின் காற்று, நிலம், நீர், மரம், தாவரங்கள்,உயிரினங்கள் போன்ற உயிருள்ள உயிரற்ற பொருட்களைப் பற்றி எடுத்துக் கூறுவது சுற்றுச்சூழல் எனப்படும் நம்மைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கின்ற நிலை நம் வாழ்விற்கு ஆதாரமாக இருக்கின்ற சூழ்நிலை இதுவே சுற்றுச் சூழலாகும்.[1]

திருவள்ளுவர் தமது திருக்குறளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்கை வளத்தினைப் பதிவு செய்திருக்கிறார். அவரது கருத்துக்களும்,அறிவுரைகளும் சுற்றுச் சூழலின் தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**புறத்தூய்மை :**

புறத்தூய்மை என்பது தண்ணீரால் ஏற்படுகிறது. அகத்தூய்மை உண்மையால் உணரப்படுகிறது. புறத்தூய்மை தரும் நீர் தூய்மையானதாக இருக்க வேண்டும். இதனை

**புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்[2] (குறள்298)**

என்ற குறள் வழி அறிய முடிகிறது. புறந்தூய்மை நீரால் அமையும் என்று குறிப்பிட்டதால்,புறத்தைத் தண்ணீரால் நன்கு சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என்பதைக் குறள் வலியுறுத்துகிறது.

கை,கால்களைக் கழுவித் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். சான்றோர் பலர் கூடியிருக்கும் இடத்தில் அறிவில்லாத ஒருவன் நுழைவதென்பது தூய்மையில்லாத வற்றை மிதித்துக் கழுவாத பாதத்தை அவன் தான் படுக்கிற படுக்கையில் வைத்ததைப் போன்றது. எனவே,கால்களைக் கழுவித் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். கிருமிகள் நம்மைத் தாக்காமலிருக்க நாம் நடந்து கொள்ளும் வகையை,

**கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல்[3] (குறள் 840)**

என்ற குறள் வழி வள்ளுவம் சுட்டுகிறது.

**கலத்தூய்மை :**

நற்பண்புகள் இல்லாத ஒருவனிடம் செல்வம் சேர்வதால் பயன் ஒன்றும் இல்லை. அச்செல்வம்,நல்ல பாலானது,அது வைக்கப்பட்டிருந்த பாத்திரம் தூய்மை இல்லாததால் திரிந்து

கெட்டு விட்டதற்கு ஒப்பானதாகும். பாத்திரங்கள் நன்கு கழுவப்பட்டுத் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்கு,

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால் திரிந் தற்று[4] (குறள் 1000)

இந்தக் குறள் சான்றாக அமைகிறது

**சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நீர்,மழை:**

நீரில்லாமல் உலக வாழ்வு அமையாது. அது போல நீரைத் தரும் வான்மழை இல்லையென்றால் அனைவரிடமும் ஒழுக்கம் அமையாது.

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு[5] (குறள் 20)

இவ்வாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நீர் மற்றும் மழையின் முக்கியத்துவம் பற்றிப் பேசுகிறது வள்ளுவம்.

**நீர் மாசுபாடு :**

தான் எந்த நிலத்தை அடைகிறதோ,அந்நிலத்தின் தன்மைக்கேற்ப நீர் மாறுபடும் இயல்புடையது. மக்களின் அறிவும் தாம் சேர்ந்த இனத்தாரின் இயல்புக்கேற்ப மாறும். ஒரு மண்ணில் கலந்த நீர் அம்மண்ணின் இயல்படையும்.

யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

(குறுந்தொகை-பா.எண்.40)[6]

எனும் செம்புலப் பெயல் நீராரின் குறுந்தொகைப் பாடலும்,நிலத் தன்மைக்கேற்ப நீரின் தன்மை மாறுபடும் என்று கூறுகிறது. பழந்தமிழர் நீரின் தூய்மையில் அக்கறை கொண்டிருந்தனர் என்பது குறள் மற்றும் குறுந்தொகைப் பாடல் வழி புலப்படுகிறது.

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர் நீரும்
இன்னாவாலீம் இன்னா செயின் (7) (குறள் 881)

இன்பம் தரும் நிழலும்,நீரும் நோய் செய்வனவாக இருந்தால் துன்பத்தையே தரும். அது போல சுற்றத்தாரின்

தன்மைகளும் துன்பம் தருமானால் தீயனவே ஆகும். நீர் மாசுப்பட்டால் துன்பம் தரும். நீர் இன்பத்தைத் தரும் வகையில் மாசற்றதாகச் செய்வது மனித குலத்தின் கடமை. நிழல் தரும் மரங்களும்,வற்றாத நதிகளும் இருந்தால் சுற்றுச்சூழல் பாதிப்படையாது. மக்கள் நலமுடன் வாழ்வர் என்பதை வள்ளுவம் வலியுறுத்துகிறது.

**மழைவளம் :**

விண்ணிலிருந்து மழைத்துளி விழா விட்டால் இம்மண்ணுலகில் பசுப்புல்லின் தலையைக் கூடக் காண முடியாது. இதனை,

**விசும்பின் துளிவீழின் அல்லாற் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது[8] (குறள் 16)**

எனும் குறள் கூறுகிறது. மண் வளம் பெற விண்ணிலிருந்து மழை பொழிவது அவசியம். மழையினால் மாசுகள் கட்டுப்படுத்தப்படும். மழையில்லாவிட்டால் சுற்றுச்சூழல் சீர்கேடு அடையும். வேளாண்மை அழிந்து உணவுப் பஞ்சம் ஏற்படும் என வள்ளுவப் பேராசான் எச்சரிக்கிறார்.

**நாட்டைக் காக்கும் அரண் :**

**மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண்[9] (குறள் 742)**

வற்றாத மணியான நீர் உடைய அகழியும்,விரிந்த மண்பரப்பும்,உயர்ந்த மலைகளும்,அடர்ந்த நிழல் தரும் மரங்களைக் கொண்ட காடும் ஒரு நாட்டைப் பாதுகாக்கும் கோட்டை என்கிறார் வள்ளுவர்.

**காற்று மாசுபாடு :**

காற்றுள்ள உலகம் வளமானது. காற்று ஓரிடத்தில் நிற்காது. காற்று உலாவிக்கொண்டிருக்கும் காற்று மாசுபடாமல் இருக்க வேண்டியதன் காரணத்தைக் குறள் எடுத்துக் கூறுகிறது.

பெருமையாளனிடம் செல்வம் சேர்ந்தால்,அது ஊர்மக்களுக்கு உதவிடும், மரங்களும் அவ்வாறே உதவி புரியும். வேர் முதல் இலைவரை பூ முதல் காய்,கனி வரை யாவும் பயன்படும். இதனை,

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்[10] (குறள் 217)**

என்ற குறள் எடுத்துக்காட்டுகிறது.

தன்மைகளும் துன்பம் தருமானால் தீயனவே ஆகும். நீர் மாசுப்பட்டால் துன்பம் தரும். நீர் இன்பத்தைத் தரும் வகையில் மாசற்றதாகச் செய்வது மனித குலத்தின் கடமை. நிழல் தரும் மரங்களும்,வற்றாத நதிகளும் இருந்தால் சுற்றுச்சூழல் பாதிப்படையாது. மக்கள் நலமுடன் வாழ்வர் என்பதை வள்ளுவம் வலியுறுத்துகிறது.

**மழைவளம் :**

விண்ணிலிருந்து மழைத்துளி விழா விட்டால் இம்மண்ணுலகில் பசுப்புல்லின் தலையைக் கூடக் காண முடியாது. இதனை,

**விசும்பின் துளிவீழின் அல்லாற் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது[8] (குறள் 16)**

எனும் குறள் கூறுகிறது. மண் வளம் பெற விண்ணிலிருந்து மழை பொழிவது அவசியம். மழையினால் மாசுகள் கட்டுப்படுத்தப்படும். மழையில்லாவிட்டால் சுற்றுச்சூழல் சீர்கேடு அடையும். வேளாண்மை அழிந்து உணவுப் பஞ்சம் ஏற்படும் என வள்ளுவப் பேராசான் எச்சரிக்கிறார்.

**நாட்டைக் காக்கும் அரண் :**

**மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண்[9] (குறள்742)**

வற்றாத மணியான நீர் உடைய அகழியும்,விரிந்த மண்பரப்பும்,உயர்ந்த மலைகளும்,அடர்ந்த நிழல் தரும் மரங்களைக் கொண்ட காடும் ஒரு நாட்டைப் பாதுகாக்கும் கோட்டை என்கிறார் வள்ளுவர்.

**காற்று மாசுபாடு :**

காற்றுள்ள உலகம் வளமானது. காற்று ஓரிடத்தில் நிற்காது. காற்று உலாவிக்கொண்டிருக்கும் காற்று மாசுபடாமல் இருக்க வேண்டியதன் காரணத்தைக் குறள் எடுத்துக் கூறுகிறது.

பெருமையாளனிடம் செல்வம் சேர்ந்தால்,அது ஊர்மக்குளுக்கு உதவிடும், மரங்களும் அவ்வாறே உதவி புரியும். வேர் முதல் இலைவரை பூ முதல் காய்,கனி வரை யாவும் பயன்படும். இதனை,

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்[10] (குறள் 217)**

என்ற குறள் எடுத்துக்காட்டுகிறது.

அனைவரிடமும் கருணை காட்டும் அருள் உடையவர்க்கு இவ்வுலகில் துன்பம் இல்லை. இதற்குக் காற்று உலவும் வளமை மிகுந்த இந்தப் பெரிய உலகமே சான்றாகும்.

**அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கு**
**மல்லல்மா ஞாலம் கரி[11] (குறள் 245)**

காணிநிலம் வேண்டும் என வேண்டிய பாரதி கேட்கும் அனைத்தும் கிராமங்களில் முன்பு கிடைத்தது. இன்று கிராமங்களே இல்லாத சூழ்நிலை உருவாகி விட்டது. கிராமங்கள் நகரங்களாகி விட்டன. சிட்டுக் குருவிகளை மறைய வைத்து கைபேசிகள் அனைத்து கிராமங்களிலும் பயன்பாட்டிற்கு வந்து விட்டன. தூய்மையான கிராமத்து வயல்வெளிக் காற்றிலும் மாசு கலந்து விட்டது. மரங்கள் மறைந்து வருகின்றன. நதிகள் பல நீரற்று வறண்டிருக்கின்றன. சுற்றுச்சூழல் தொடர்பான வள்ளுவச் சிந்தனைகளை மனத்தில் கொண்டு சுற்றுச் சூழலை மாசுபடுத்தாமல் இருப்பது நம் அனைவரின் கடமையாகும்.

**சான்றெண் விளக்கம்:**

1) மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்,பதினேழாவது ஆண்டு நிறைவு விழா மலர் 2004, ப.350
2) திருவள்ளுவர்–திருக்குறள்,வாய்மை, குறள் 298
3) திருவள்ளுவர்–திருக்குறள், பேதைமை, குறள் 840
4) திருவள்ளுவர்–திருக்குறள், பண்புடைமை, குறள் 1000
5) திருவள்ளுவர்–திருக்குறள், வான்சிறப்பு, குறள் 20
6) குறுந்தொகை–பா.எண்.40
7) திருவள்ளுவர்–திருக்குறள், உட்பகை, குறள் 881
8) திருவள்ளுவர்–திருக்குறள், வான்சிறப்பு, குறள் 16
9) திருவள்ளுவர்–திருக்குறள், அரண், குறள் 742
10) திருவள்ளுவர்– திருக்குறள்,ஒப்புரவறிதல்,குறள் 217
11) திருவள்ளுவர் –திருக்குறள்,அருளுடைமை,குறள் 245

**துணை நூற்பட்டியல் :**

1) ச.வே.சுப்பிரமணியன் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை–08
2) புலியூர்க் கேசிகன் குறுந்தொகை மூலமும் வரையும், கௌரா பதிப்பகம்,சென்னை–05.



**தங்கம் தென்னரசு**
தொழில்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

தேதி : 17.05.2022

# வாழ்த்துரை

"அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல் தீதண்டு - குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு"

எனும் திருவள்ளுவமாலைப் பாடலில், அறம் என்னும் அகல்விளக்கில் பொருள் என்னும் திரிகொண்டு, இன்பம் என்னும் நெய் வார்த்து, செஞ்சொல் என்னும் சுடர்கொண்டு, குறட்பாவைத் தண்டாகக் கொண்டு உலக மக்களின் அறியாமை இருளகற்ற அருள் விளக்கேற்றினார் வள்ளுவப்பெருந்தகை என்கிறார் நப்பாலத்தனார் என்னும் புலவர்.

இங்கு. "வையத்து வாழ்வார்கள்" என்ற சொற்களை நாம் கவனிக்க வேண்டும். அவர், தமிழருக்கு என்று கூறி, குறளைக் குறுகிய வட்டத்திற்குள் அடைக்கவில்லை. இதனை மற்ற அறிஞர்களும் அறிந்திருந்ததனால்தான் "உலகப் பொதுமறை" என்று உயர்வாக மதிக்கப்பெறுகிறது திருக்குறள்.

உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடம் பெறுவது திருக்குறள். 1.பைபிள், 2.திருக்குர்ஆன், 3.திருக்குறள். ஆனால் சமயம் சாராத நூல்களுள் திருக்குறள்தான் முதலிடம் பெறுகிறது.

எக்காலத்திலும் எந்நாட்டவரும் இன்பத்துடன் பொருளுள்ள வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அறக்கருத்துகளை எடுத்துரைக்கின்ற உலகப்பொதுமறையாம் முப்பால் நம் தமிழ்மொழியில் படைக்கப்பட்டிருப்பது தமிழர் பெற்ற பெறும்பேறு ஆகும்.

இத்தகு சிறப்புகள் நிறைந்த திருக்குறளின் சிறப்புகளை இளந்தலைமுறையினரிடம் எடுத்துச் செல்லும் வகையிலும், அதனுள் ஆழப்பொதிந்திருக்கும் அரிய கருத்துகளை அறிஞர் உலகம் அறியச் செய்யும் வகையிலும், திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் 11.06.2022 ஆம் நாள் "உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு" நிகழவிருப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

"உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு" நன்முறையில் வெற்றியடையவும், அதன் நோக்கம் நிறைவேறவும் எல்லாம் வல்ல தமிழன்னை அருள்புரியட்டும் என்று சொல்லி, இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யும் குறளன்பர்கள் அனைவருக்கும் அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

(தங்கம் தென்னரசு)

ISBN 978-81-909877-8-3

உள்ளத்தனையது உயர்வு

விலை ரூ. 350/-